Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 27 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ரஜப் 26 (12.09.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ் :345



மொறாயஸ் ஒளிச்சுடர்

பல், மூக்குக் கண்ணாடியகம்

இல.546, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

[1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]

(சி/2434)

## இந்திய கடற்படைத் தளபதி இன்று கொழும்பு வருகிறார் !

(கொழும்பு)



இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் அருண் பிரகாஷ் நான்கு நாள் விஜயமாக இன்று இலங்கை வரவுள்ளார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு நட்புறவு ஒப்பந்தம் அடுத்தமாதம் கைச்சாத்திடப்பட வுள்ள சூழ்நிலையிலேயே - இந்திய கடற்படைத் தளபதியின் இந்த விஜயம் அமையவுள்ளது.

கடந்த ஜூலை 31 ஆம் திகதி இந்தியக் கடற்படையின் தலைமைத் தளபதியாக பொறுப்பேற்ற அட்மிரல் அருண் பிரகாஷ் தமது முதலாவது வெளிநாட்டு விஜயத்தை இன்று இலங்கைக்கு மேற்கொள்கிறார்.

இன்று கொழும்பு வரும் அட்மிரல் அருண் பிரகாஷ், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார

(12 ஆம் பக்கம் பார்க்க)

ஊர்காவற்துறையில்

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் துப்பாக்கிச்சூட்டில் பலி!

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையில் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் நேற்றுமாலை இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பி.அருள்தாஸ் என்ற ஈ.பி.டி.பி. உறுப்பினரே நேற்றுமாலை 7 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டவராவார். ஊர்காவற்றுறையில் இவர் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது இனந்தெரியாதோரால் சுடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் ஈ.பி.டி.பி. உறுப்பினரான அருள்தாஸ் ஸ்தலத்திலே உயிரிழந்ததாகவும், இதனையடுத்து இவரது சடலம் ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அங்கிருந்து நேற்றிரவு இவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டது. சடலம் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மரணவிசாரணை இன்று நடைபெறும் எனத் தெரிய வருகிறது. யாழ். போதனா வைத்தியசாலைக்கு உயிரிழந்தவரின் சடலம் எடுத்து வரப்பட்டதையடுத்து, வைத்தியசாலைக்கு முன்பாக பெருமளவு படையினரும், பொலிஸாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானிய விசேட தூதர் அடுத்தவாரம் வருகிறார்!

(கொழும்பு)



சமாதான முயற்சிகள் தொடர்பாகவும், நிதியுதவிகளை வழங்குவது தொடர்பாகவும் ஆராய்வதற்கு ஜப்பானின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் யசுஷி அகாஷி அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கடந்த வாரம் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், ஜப்பானுக்கு விஜயம் செய்திருந்தபோது, சமாதான முயற்சிகள் தாமதமடைவதால் ஜப்பானிய அரசாங்கம் நிதியுதவிகளை தாமதமின்றி வழங்குமாறு கோரியிருந்தார்.

அத்துடன், இலங்கைக்கு விஜயம் செய்யுமாறும் இலங்கைக்கான விசேட தூதுவர் யசுஷி அகாஷிக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இதனடிப்படையிலேயே சமாதான முயற்சி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாக யோசனையை சிங்கள மக்களும் ஆதரிக்கின்றனர்!

## காணாமற்போனோரின் குடும்பத்தவர் சங்க செயலாளர் பத்திரன கூறுகிறார்!

(யாழ்ப்பாணம்)

**தமிழ்மக்கள் கோரிநிற்கும் நிர்வாகசபை உரிமையை சிங்கள மக்களும் ஆதரிக்கின்றனர். ஆனால் சில தீய சக்திகளே இனவாதத்துடன் பேசுகின்றன என காணாமற்போனோரின் பெற்றோர் குடும்ப அங்கத்தவர்களுக்கான அமைப்பின் செயலாளர் டி.பத்திரன தெரிவித்தார்.**




யாழ்ப்பாணம் வந்துள்ள அவர் நேற்று செய்தியாளர்களை வீரசிங்கம் மண்டபத்தில் சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

பட்டதற்காகவே கறுப்பு ஜூலை என்ற கொடூர சம்பவம் ஒன்று நடைபெற்றது. ஆனால், முல்லைத்தீவு படைமுகாம் தகர்ப்பின்போது ஆயி

யாழ்ப்பாணம் வந்துள்ள அவர் நேற்று செய்தியாளர்களை வீரசிங்கம் மண்டபத்தில் சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

13 இராணுவத்தினர் படுகொலை செய்யப்பட்டதற்காகவே கறுப்பு ஜுலை என்ற கொடூர சம்பவம் ஒன்று நடைபெற்றது. ஆனால், முல்லைத்தீவு படைமுகாம் தகர்ப்பின்போது ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் உயிரிழந்தனர். அப்போது ஏன் கறுப்பு ஜுலை

(12 ஆம் பக்கம் பார்க்க)



## புல்லுமலைத் தாக்குதல் சம்பவம்

# படையினர் நடத்தியதற்கு ஆதாரம் கிடைக்கவில்லை!

## கண்காணிப்புக்குழு பிரதித் தலைவர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் புல்லுமலைப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல் நிலையத்தின் மீது, இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியதற்கான எந்த ஆதாரங்களும் தமக்குக்கிடைக்கவில்லை என போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்றுமுன்தினம் புல்லுமலைச் சம்பவம் தொடர்பாக கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு எழுதிய கடிதம் குறித்துக் கருத்து வெளியிட்ட போதே ஹக்ரப் ஹொக்லன்ட் இவ்வாறு தெரிவித்தார்.

'மக்' எனப்படும் கண்ணிவெடி அகற்றும் ஊழியர்கள் மட்டுமே இந்தக் குற்றச்சாட்டுகான ஒரே ஆதாரமாக இருக்கிறார்கள்.

அது எப்படி இருப்பினும் இந்தத் தாக்குதல் தொடர்பாக பூரண விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# லண்டன் இளைஞர் கொலைச் சம்பவம்; தமிழ் இளைஞருக்கு ஆயுள் தண்டனை

(லண்டன்)



கொலை செய்யப்பட்டவர்

ஈழத்தமிழ் இளைஞர் ஒருவரை வெட்டிக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மற்றொரு தமிழ் இளைஞருக்கு லண்டன் நீதிமன்றமொன்று நேற்றுமுன்தினம் ஆயுள் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

தங்கராசா - மயூரன் (வயது - 24) என்ற இளைஞருக்கே இந்த ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி லண்டன் வெம்பிளி என்ற இடத்தில் இரட்ணசேகரம் அசன் (வயது 18) என்ற இளைஞர் காரில் சென்றுகொண்டிருந்த வேளை, இளைஞர்கள் சிலர் இவரை வாளால் வெட்டினர்.

இவ்வாறு வெட்டப்பட்ட நிலையில் அசனை வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றபோதும், அவருக்கு ஏற்பட்ட காயம் காரணமாக அசன் வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட குழுவில் தங்கராசா - மயூரன் என்ற இளைஞர் இனங் காணப்பட்ட நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருந்தார். இவருக்கு நேற்றுமுன்தினம் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது.

இது தொடர்பாக லண்டன் பொலிஸார் தெரிவிக்கையில் -

இரட்ணசேகரம் - அசனின் கொலையுடன் சம்பந்தப்பட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

நமது ஈழநாடு

## இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை, இலக்கிய - போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவை யொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

### போட்டிக்கான விதிகள்

### சிறுகதை மற்றும் கவிதைப் போட்டி

- படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும் - மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.
- சிறுகதைகள் யாவும் தெளிவான எழுத்திலோ, தட்டச்சு செய்யப் பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் - தட்டச்சில் 5 பக்கங்களுக்குள்ளும் இருப்பது அவசியம்.
- கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 30 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்கள் யாவும் சமகால சமூகவியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.
- ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### புகைப்படப் போட்டி

- புகைப்படத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் தொழில் சார் கலைஞர்கள் எவரும் இதில் பங்குபற்றலாம் - வயது வேறுபாடில்லை.
- போட்டிக்கு அனுப்பப்படும் படங்கள் கறுப்பு வெள்ளைப் படங்களாகவும் இருக்கலாம். வண்ணப்படங்களாகவும் இருக்கலாம். அளவு 6 X 4 அங்குலம் ஆக இருத்தல் அவசியம்.
- புகைப்படங்கள் - எமது மண்ணின் இயற்கையழகு எமது மண்ணின் பாரம்பரியம், சமகால வரலாற்றுப் பதிவுகள் ஆகியவற்றைப் பதிவு செய்ததாக இருக்கவேண்டும்.
- ஒருவர் மூன்று படங்கள் வரை அனுப்ப முடியும். ஆனால் ஒரு படத்துக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
- புகைப்படங்களுடன் பெயர் விலாசம் போன்றவை தனியாக இணைக்கப்படல் வேண்டும்.
- அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### கையெழுத்து சஞ்சிகை உருவாக்கல் போட்டி

*நிபந்தனைகள்*

இந்தப் போட்டி இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும்.

1. பாடசாலை மாணவர்களுக்கானது.
2. தனிநபர் - தனியார் அமைப்புக்களுக்கானது

பாடசாலை மாணவர்களுக்கான போட்டி மத்திய பிரிவு - மேற்பிரிவு என இரு பகுதிகளாக நடத்தப்படும்.

மத்திய பிரிவு- க.பொ.த (சாதாரண) தரத்திற்கு உட்பட்டவர்களுக்குரியது.

மேற்பிரிவு - அதற்கு மேற்பட்டவர்களுக்குரியது.

- போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் சஞ்சிகைகள் மாணவர்களின் சுய படைப்பாற்றல் மற்றும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துபவையாக இருக்க வேண்டும்.
- சஞ்சிகைகள் 40 முதல் 50 பக்கங்கள் வரையுள்ளதாகவும் ஒரு அழகான கலைத்துவமான சஞ்சிகைக்குரிய தரமான வடிவமைப்புக் கொண்டதாகவும் தெளிவான கையெழுத்துக்களில் எழுதப்பட்ட வையாகவும் இருத்தல் வேண்டும்.
- தனிநபர்கள் - தனியார் அமைப்புகள் ( இலக்கிய வட்டங்கள் - சனசமூகநிலையங்கள்) அனுப்பிவைக்கும் சஞ்சிகைகளும் மேற்குறிப்பிட்ட விதிகளை அனுசரிக்க வேண்டும்.
- மாணவர்கள் தங்களின் சஞ்சிகை தயாரிப்பில் தமது ஆசிரியர்களின் ஆலோசனைகளை நாடமுடியும்.
- மிகத் தரமானதெனத் தேர்தெடுக்கப்படும் - சஞ்சிகைகளுக்குரிய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய ஆக்கங்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்.
- சஞ்சிகைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 15.09.2004
- பதிவுத்தாபாலில் அனுப்புதல் பாதுகாப்பானது: - நேரிலும் கையளிக்கலாம்.
- பாடசாலை மாணவர்களின் சஞ்சிகைகள் பாடசாலை வகுப்பாசிரியர் அல்லது அதிபரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

**குறிப்பு:-** இப்போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற முடியாது.

போட்டிக்கான ஆக்கங்கள்
அனுப்ப வேண்டிய முகவரி:- நமது ஈழநாடு -
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## நீடிக்கப்பட்டுள்ளது

வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில் நுட்ப நிறுவனம் நடத்தும் கண்ணிவெடி செயற்பாடு தொடர்பான கட்டுரைச் சித்திரப் போட்டிகள்.

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில்நுட்ப நிறுவனம் நடத்தும் *கட்டுரை சித்திரப் போட்டிகளின் இறுதிநாள் 30.09.2004 வரை நீடிக்கப்பட்டுள்ளது* என்பதனை ஆர்வலர்களுக்கு அறியத்தருகின்றோம்.

போட்டிகள் பற்றிய முழுவிபரங்கள் நமது ஈழநாடு 15.08.2004 இலும், 16.08.2004 உதயன் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில் நுட்ப நிறுவனம்,
இல.63, பலாலி வீதி,
திருநெல்வேலி.

T.P : 222 5932

# நவவோதய பாடசாலை வாரம் பருத்தித்துறையில் அனுஷ்டிப்பு

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நவோதய பாடசாலை வாரம் கடந்த திங்கட்கிழமை முதல் அனுஷ்டிக்கப் பட்டுவருகிறது.

கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.புஸ்பலிங்கத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்தத் தொடக்க விழாவில் வடமராட்சி வலய முறைசார் கல்விப் பிரிவு உதவிப் பணிப்பாளர் எஸ்.சிறீபதி, பாடசாலை அதிபர் திருமதி எஸ். சுந்தரேசன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

இதில், வடக்கு கிழக்கு மாகாண மட்ட கணித விஞ்ஞான வினாடி வினாப் போட்டியில் தரம் 10 இல் முதல் பரிசுபெற்ற கு.தர்சினி தரம் 7இல் இரண்டாம் பரிசுபெற்ற த. மைதிலி ஆகிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டது. அத்துடன் பாடசாலைச் சுற்றாடல் சிரமதானம் செய்யப்பட்டது.

இரண்டாம் நாள் செவ்வாய்க் கிழமை மாணவத் தலைவர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. அன்று "இன்றைய உலகின் முன்னேற்றத்திற்கு பெரிதும் பங்காற்றுவது முதியோர்களா? இளைஞர்களா" என்னும் தலைப்பில் மாணவிகளின் பட்டிமன்றம் நடைபெற்றது.

மூன்றாம் நாள் புதன்கிழமை சமயம், மற்றும் விழுமிய தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதில், பருத்தித்துறை கிறிஸ்தவ போதகர் சதீஸ் அடிகளாரும், தும்பளை நெல்வண்டை பத்திரகாளி அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சோமஸ்கந்தராஜக் குருக்கள் ஆகியோர் உரையாற்றினர்.

நான்காம் நாள் வியாழக்கிழமை மொழி மற்றும் தொழில் நுட்பதினம் அனுஷ்டிக்கப்பட்டது இந்தநிகழ்வில், மாணவர்களின் கருத்துரைகள் இடம பெற்றன. ஐந்தாம் நாள் வெள்ளிக் கிழமை மாணவர்களின் ஆக்கத் திறன் கண்காட்சி சிறப்பாக நடை பெற்றன. (14)

**தேர்த்திருவிழா சிறப்பு நிகழ்வு**

நல்லூர் முருகன் தேர்த்திருவிழா வன்று இரவு 7 மணிக்கு நல்லூர் ஸ்ரீ முருகன் தண்ணீர்பந்தலில் சிறப்பு இசை நிகழ்வு நடைபெறும். இந்நிகழ்வில், முன்னணிக் கலைஞர்கள் பங்குபற்றவுள்ளனர்.

## கலைப்பீட ஆசிரியர்களுக்கு மூன்று நாள் கருத்தரங்கு!

(யாழ்ப்பாணம்)

பெறுமான மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்ட கலை பீடத்தின் புதிய கற்கைநெறி அமைப்பு முறைபற்றி கலைப்பீடத்தின் அனைத்துத்துறை ஆசிரியர்களுக்கும் கருத்தரங்கு எதிர்வரும் 15 முதல் மூன்று நாட்கள் மு.ப 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

முதல்நாள் கருத்தரங்கு இராமநாதன் நுண்கலைப் பிரிவைச் சேர்ந்த நிரந்தர, தற்காலிக வருகை விரிவுரையாளர்களுக்காகவும் இரண்டாம், மூன்றாம் நாள் கருத்தரங்குகள் ஏனைய கலைப்பீட துறைசார்ந்த நிரந்தர விரிவுரையாளர்களுக்காகவும் நடைபெறவுள்ளது. மேற்படி கருத்தரங்குகள் யாவும் பேராசிரியர் என்.ஞான குமாரன், பேராசிரியர் வி.பி.சிவநாதன் ஆகியோரின் நெறிப்படுத்தலின்கீழ் இடம் பெறவுள்ளது.










## யாழ்.பிரதம தபாலக வளாகம் புதனன்று திறந்து வைக்கப்படும்!

யாழ். நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிரதம தபாலக வளாகம் எதிர்வரும் புதன்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளதாக வட.பிராந்திய அஞ்சலக அதிபர் வட்டாரங்கள் தெரிவித்தன.

நவீன வசதிகளுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு பல மாதங்களாக திறக்கப்படாதிருக்கும் இந்தத் தபாலகத்தை உடன் திறக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து திறப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக தெரியவருகிறது. இந்த தபாலக வளாகத்தில், யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளிலும் தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் மாவட்ட தபால் அத்தியட்சகர் அலுவலகம், வடபிராந்திய பிரதி அஞ்சல் மா அதிபர் அலுவலகம், வடபிராந்திய தபால் திணைக்கள கணக்காளர் அலுவலகம், வடபிராந்திய தபால் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் அலுவலகம் மற்றும் யாழ்ப்பாண பிரதம தபாலகம் என்பன இந்த வளாகத்தில் இயங்கவுள்ளன (31)

### வலி. கிழக்குப் பிரதேச

## ஆயுர்வேத வைத்தியசாலைக்கு மருந்துப் பொருட்கள் அனுப்பிவைப்பு!

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேசசபைக்குட்பட்ட ஆயுர்வேத வைத்தியசாலைக்கு கொழும்பு ஸ்ரீலங்கா நாவின்ன ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தினால், ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வலி.கிழக்குப் பிரதேசத்தில், பிரதேசசபையினால் நடத்தப்பட்டு வரும், நீர்வேலி, உரும்பிராய், அச்சுவேலி, புத்தூர், கோப்பாய் ஆகிய ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு வரும் நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப்படவுள்ளதாக வைத்திய அதிகாரி பொன்.சண்முகரத்தினம் தெரிவித்தார்.

தற்போதைய மருந்துத் தேவைகளுக்கு குடாநாட்டில் தயாரிக்கப் படும் ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த வைத்தியசாலைகளில் வாதரோகம் சிறுபிள்ளைகளுக்கான கிரந்திரோகம், சருமரோகம், செங்கண்மாரி போன்ற நோய்களுக்கு அதிகளவானோர் தினமும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## கண்ணீர் அஞ்சலி

கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை முன்னாள் ஆசிரியை மார்க்கண்டு மீனலோசனி, தாளையடி உப அஞ்சலதிபர் மார்க்கண்டு நிர்மலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையார்.

### நாகமுத்து மார்க்கண்டு

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளை காணிக்கையாக்குகின்றோம்.

கொ.அ.ஸ்ரனிஸ்லாஸ்,
(இளைப்பாறிய உப அஞ்சலதிபர்),
உப அஞ்சலதிபர், அலுவலக ஊழியர்கள்,
உப அஞ்சல் அலுவலகம்,
முள்ளியான். (926)

### நமது ஈழநாடு பத்திரிகையில் 05.09.2004 ஞாயிற்றுக்கிழமை வெளிவந்த தத்துவப் பத்திரம் இரத்துச் செய்தல் தொடர்பாக...

மேற்படி பத்திரிகையில் 06.09.2004 இல் இல. 10, நாவலடி ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த குணரத்தினம் ஸ்ரீதரனுக்கு கனடாவில் இருந்து இரத்தினசிங்கம் சேனாதிராஜாவும் மனைவி கிரிஜாவும் 01.06.2003 இல் வழங்கிய தத்துவப் பத்திரம் இரத்துச்செய்யப்பட்டது என்பது பற்றிய அறிவித்தல் வெளவந்திருந்ததும் அவ்வறிவித்தலை கந்தசாமி நந்தகுமாரன் J.P (தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்) ஆகிய நான் உறுதிப்படுத்துகிறேன்.

(928) - கந்தசாமி JP

6 மாதம் யாழ்ப்பாணத்தில் M.M.I.C 20 % கழிவு

வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைசார் தபால்மூலம் கற்கைநெறி

**Diploma in Massemedia**
**Dip.in.m.m.(Sri lanka)** சான்றிதழ்

இல.15, சிறாம்பியடி லேன்,மணியம் பில்டிங்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Call: 0777316258

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சண்முகலிங்கம் மயூரன் என்ற பெயருடைய சாரதி அனுமதிப்பத்திரமும், குருபரன் என்ற பெயரில் மோட்டார் அனுமதிப்பத்திரமும் கடந்த 03.09.2004 ஆம் திகதி வெள்ளிக் கிழமை யாழ்ப்பாணம் இலுப்பையடிக்கும், மானிப்பாய் பிரதேசசபைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் - மானிப்பாய் பிரதேசசபையில் அல்லது 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C/3086)

### பனையின் பயன்களை ஊக்குவிப்போம்

இரண்டாயிரம் பனம் விதை சேகரித்தல் போட்டி - 2004 - விபரங்களுக்கு எழுத்து மூலம் தொடர்பு கொள்க. விண்ணப்ப முடிவு திகதி 30.09.2004. சிவதர்சினி பனம் பொருள உற்பத்தி தனியார் நிறுவகம், திரு. திருமதி.வே.கெ.தபாலன், நுணாவில் மத்தி, சாவகச்சேரி. (919)

ரோஸ், ரசம், நன்னாரிரசம், நெல்லி ரசம், கிறேப் சர்பத், பஷன் ரசம், மிக்ஸ் புரூட் ரசம், அன்னாசி ரசம், தேசிக்காய் ரசம் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முகமதி கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ். இல : 777, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (C/3022)

## கொள்கைப்பத்திரம் தயாரிப்பதற்கு
# பிரதிநிதியை கிளிநொச்சிக்கு அனுப்புமாறு மகாநாயகருக்கு தமிழ்ச்செல்வன் தகவல்!



மல்வத்த மகாநாயக்க தேரருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைக்கான கொள்கைப்பத்திரத்தைத் தயாரிப்பதற்காகப் பங்கேற்கும் பிரதிநிதியின் பெயரை கிளிநொச்சிக்கு அனுப்புமாறு, அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்- மல்வத்த மகாநாயக்க தேரருக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

அண்மையில் விடுதலைப் புலிகளைச் சந்தித்த மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரனூடாக இந்தத் தகவல் அனுப்பப்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

அதன்போது விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட சிக்கல்கள் பற்றியும், இடைக்கால நிர்வாகசபை தொடர்பாகத் தெற்கின் அரசியல் கட்சிகள் கொண்டுள்ள நிலைப்பாடு பற்றியும் கலந்துரையாடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொள்கைப்பத்திரம் தயாரிக்கப்படும்போது, அரசினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யுத்தக் காரணிகள் சிலவற்றை உட்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், இந்தக் கலந்துரையாடலை கிளிநொச்சியிலுள்ள புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் குறித்து விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கத்துக்குத் தெரியப்படுத்துவதற்காக எதிர்வரும் 17 ஆம் திகதியன்று சந்திரசேகரன் லண்டன் செல்லவுள்ளார் எனவும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (தே)

## அடிப்படை உரிமை மீறப்பட்டதாக அப்துல் காதர் உயர்நீதிமன்றில் வழக்கு

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான அப்துல் காதர், தனது அடிப்படை உரிமை மீறப்பட்டதாகத் தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

அவரது மனுவில் ஊழல் விசாரணைப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சி.ஈ.வெதசிங்க, பொலிஸ் பரிசோதகர் ருவான் குணசேகர உட்படப் பலர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தன்னைக் கைதுசெய்ய வந்த வேளையில் பொலிஸார் தவறான முறையைக் கையாண்டதுடன், சட்ட விரோதமான முறையில் தடுத்து வைத்திருந்ததாகவும், நீதிமன்ற உத்தரவின்றி தடுத்துவைத்தமை சட்ட விரோதமானது என்றும் அப்துல் காதர் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம் தனது அடிப்படை உரிமை மீறப்பட்டதாகவும், ஒரு மில்லியன் ரூபாவை நட்டஈடாகப் பெற்றுத் தருமாறும் உயர்நீதிமன்றத்திடம் அவர் கேட்டுள்ளார்.

# அரசுக்குள் கருத்து முரண்பாடு ஆனாலும் வீழ்ந்து விடாதாம்!
## ஜே.வி.பி அமைச்சர் லால் கந்த தெரிவிப்பு



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்குள் கருத்து முரண்பாடுகள் தோன்றியிருக்கின்றன. ஆனாலும் இந்த முரண்பாடுகளால் அரசாங்கம் வீழ்ந்துவிடும் என்று எவரும் மனப்பால் குடிக்கவேண்டாம் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான லால் கந்த தெரிவித்தார்.

அரசாங்க ஊழியர் சம்பள அதிகரிப்பு தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் நாடாளுமன்றில் மேலும் பேசும்போது -

எதிர்வரும் நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படும் வரவு - செலவு திட்டத்தில் நிச்சயமாக அரச ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்படும். அதற்கு முன்னர் எந்த சம்பள உயர்வுமே வழங்கப்படமாட்டாது. பெற்றோலியக் கூட்டுத்தாபனமோ, மக்கள் வங்கியோ ஒருபோதும் தனியார் மயமாக்கப்படாது. சம்பள உயர்வுகளை வழங்குவதால் மட்டும் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது. சம்பள முரண்பாடுகளைக் களைவது அவசியம்.

சம்பள உயர்வுகோரிப் போராட்டம் நடத்துவது தொழிற்சங்கங்களின் உரிமை. அதனை ஒருபோதும் தடுக்கப்போவதில்லை. இத்தகைய போராட்டங்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்குமாறு பொலிஸ் மா அதிபரிடம் கோரப்போவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தகவல் வழுங்குவோரைப் பாதுகாக்க விசேட திட்டம்!
## விசேட அதிரடிப்படை கட்டளை அதிகாரி தகவல்

(கொழும்பு)

விசேட அதிரடிப்படையினருக்கு தகவல் வழங்குபவர்கள் அண்மைக்காலமாகக் கொல்லப்படுவதையடுத்து, அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் விசேட செயற்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொள்ளவிருப்பதாக விசேட அதிரடிப் படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் லிவ்க் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

அதிரடிப்படையினருக்குத் தகவல் வழங்குவோருக்கு விடுதலைப் புலிகளால் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே இவர்களைப் பாதுகாக்கவேண்டியது எமது கடமையாகும்.

எனவே இந்த ஆய்வின் பின்னர் தகவல்களை வழங்குவோருக்குப் பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக விசேட திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இந்த வகையில் தகவல் வழங்குவோரைப் பாதுகாக்கவேண்டியது அதிரடிப்படையினரின் கடமையாகும். அத்துடன் அவர்களைப் பாதுகாப்பது எனது கடமையுமாகும். ஏனெனில் அவர்கள் எனக்குக்கீழ் பணிபுரிகின்றனர்.

அதேநேரம் தகவல் வழங்குபவர்களும் தமக்கு வருமென எண்ணும் அச்சுறுத்தல்களிலிருந்து முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்ளவேண்டும்.

தகவல் வழங்குபவர்களுக்கு அச்சுறுத்தல் உள்ளதென படையினர் தெரிவித்திருந்தும் அவர் தனது பாதுகாப்பில் எவ்வித சிரத்தையும் மேற்கொள்ளமல் திரிந்து, அதனால் அவருக்கு வரும் பிரச்சினைகளுக்கு படையினர் பொறுப்பேற்கமாட்டார்கள்.

அத்துடன் அம்பாறை மாவட்டத்தின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் முகமாக அங்கு புதிய விசேட அதிரடிப்படை முகாமொன்று அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சமாதான முன்னெடுப்பு முயற்சிகள் இணைத்தலைவர்கள் பொறுப்பில்!
## ஜனாதிபதி சந்திரிகா தீர்மானம்



(கொழும்பு)

சமாதான முயற்சிகள் தொடர்பான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக சம அந்தஸ்துள்ள இரு தலைவர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளதாக சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி இதற்கான சம அந்தஸ்துள்ள தலைவர்களாகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் நியமிப்பது என ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் கடந்த வியாழக்கிழமையன்று நடைபெற்ற கலந்துரையாடலின்போது இது தொடர்பாக உத்தியோகப்பற்றற்ற முறையில் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டாலும், உடன்பாடு எட்டவில்லை என ஜனாதிபதி மாளிகைத் தகவல்கள் தெரிவித்தன.

எப்படியாயினும் சமாதான முயற்சியில் சம தலைவர்கள் பதவியை எதிர்க்கட்சித் தலைவரை ஏற்றுக் கொள்ளுமாறு தூண்டுவதற்குத் தூதுவர்கள் மட்டத்தில் ஜனாதிபதி முயற்சித்து வருவதாக தெரியவருகிறது.

அரசாங்கத்தின் சார்பில் சமாதான முயற்சிக்கான இணைத் தலைவர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி சந்திரிகா, மகிந்த ராஜபக்ஷவுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு தெரிவு செய்யப்படும் சம அந்தஸ்துத் தலைவர்களின் நேரடிச் செயற்பாட்டின் கீழ் வேறொரு சமாதானப் பேச்சுவார்த்தை சபையை நியமித்து, சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதே ஜனாதிபதியின் நோக்கம் என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளமுடிகிறது.

இது தொடர்பாக சிறிய கட்சிகளுடனும் ஜனாதிபதி கலந்துரையாடவுள்ளதாகவும் ஜனாதிபதி செயலக தகவல்கள் தெரிவித்தன.

சமாதான முயற்சி தொடர்பாக சம தலைவர் பதவியை ஏற்பதற்கு எதிர்க்கட்சித் தலைவரிடமிருந்து சம்மதம் கிடைத்தால் நாளை இலங்கைக்கு வரவுள்ள நோர்வே பிரதிநிதி எரிக்சொல்ஹெய்முக்கும் இதனைத் தெரியப்படுத்தி - தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதி ஆயத்தமாகவுள்ளதாகவும் அப்பத்திரிகை மேலும் கூறியுள்ளது. (தே)

# பிரதியமைச்சர் மகிந்தானந்தவுக்கு கம்பளை நீதிமன்றம் பிடியாணை!

(கொழும்பு)

மின்சக்தி பிரதியமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு கம்பளை நீதிமன்ற நீதிவான் இரண்டு பிடியாணைகளைப் பிறப்பித்துள்ளதாக ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளரும், அமைச்சருமான ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேக்கு எதிராக கம்பளை நீதிமன்றத்தில் வழக்குகள் விசாரணை செய்யப்பட்டுவருகின்றது. அவர் கடந்த புதன்கிழமை நீதிமன்றத்தில் ஆஜராகாததன் காரணமாகவே அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிககப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிரதியமைச்சர் நாடாளுமன்றத்தில் கட்டாயமாகப் பிரசன்னமாகியிருக்க வேண்டும் என்ற தகவலை நீதிமன்றத்துக்கு நாடாளுமன்றப் பொதுச் செயலாளர் எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியனவற்றின் நீதியரசர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குவது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட யோசனை நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

இதன் காரணமாக பிரதியமைச்சா மகிந்தானந்த அளுத்கமகே நாடாளுமன்றத்தில் பிரசன்னமாக வேண்டும் என்று, நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் நாடாளுமன்ற செயலாளர் குறிப்பிட்டுள்ளதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே மேலும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் நாடாளுமன்ற செயலாளரின் அந்தக் கடிதத்தை நீதிமன்ற நீதவான் ஏற்றுக்கொள்ளவில்லை.

நாடாளுமன்றச் செயலாளரினால் இதற்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் ஒன்றையும் கம்பளை நீதிமன்ற நீதிவான் நிராகரித்திருந்ததாகவும் அமைச்சர் பெர்ணாண்டோ புள்ளே நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

## புகைத்தலைத் தடுக்கும் ஆலோசனை நாடாளுமன்றில்

(கொழும்பு)

நாட்டில் உள்ள பொது இடங்களைப் புகைப்பிடிக்கத் தடை விதிக்கப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்துமாறு நாடாளுமன்றத்தில் ஆலோசனை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க இந்த யோசனையை நேற்று சமர்ப்பித்தார்.

இந்த ஆலோசனை நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளது.

# பதவிக்காக அலையும் ஜே.வி.பியினர் நீலிக்கண்ணீர் வடிப்பது வேடிக்கையே
## ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்



அரசாங்கத்தின் அனைத்து வசதிகளையும் அனுபவித்துவரும் ஜே.வி.பி - பணம், புகழ், பதவி என்ற பேராசையில், அனைத்தையும் அனுபவித்துக் கொண்டு, அரசாங்கத்தையே கண்டிப்பது போன்று நீலிக்கண்ணீர் வடிப்பது வேடிக்கையாக உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்ட ஐ.தே.மு. அங்கத்தவர்களுடனான சந்திப்பின்போது இவ்வாறு ஜே.வி.பி.யைக் கடிந்துகொண்ட ரணில் - மக்களைப் பாதுகாக்கும் கட்சி என்று மக்களையே ஏமாற்றி வாக்குகளைப் பெற்ற ஜே.வி.பி.கட்சி, தற்போது பதவி, புகழ், பணம் என்று அலைவது வெட்டவெளிச்சமாகியுள்ளது.

பதவி, புகழ், பணம் போன்றவற்றுக்காகவே கூட்டணி அமைத்த ஜே.வி.பி, தனது கொள்கைகளை அதுகுறித்தே நகர்த்திக்கொண்டு, மக்களை ஏமாற்றி, சிங்கள இனத்தை ஏமாற்றிக் காட்டிக்கொடுத்த ஒரு சின்னத்தனமான கட்சியாக ஜே.வி.பி. காட்சிதருகிறது.

சுதந்திரக்கட்சி தவறிழைக்கும்போது, அந்தக் கட்சியை நேர்வழியில் நடாத்தவே தாங்கள் கூட்டணி அமைப்பதாக மக்களை ஏமாற்றிய ஜே.வி.பி, சுதந்திரக்கட்சியுடன் இணைந்த பின்னர், மக்களை ஏமாற்றி, அரசாங்க வசதிகள், வாய்ப்புக்கள், புகழ், பெருமை என்று அலைவதாகவும், மக்களே இதற்கு ஒரு நல்ல பதிலை வழங்குவார்கள் என்றும் கூறியுள்ளார்.

# இந்திய அணி 98 ஓட்டங்களால் கென்ய அணியை தோற்கடித்தது



மினி உலகக் கிண்ணப் போட்டியில் இந்திய - கென்ய அணிகளுக்கிடையில் நேற்று லண்டன் - ரோஸ் பவுல் மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் இந்திய அணி 98 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற கென்ய அணித் தலைவர், முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார். இதனால் இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. இந்த அணி சார்பாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக - அணித் தலைவர் கங்கூலி மற்றும் ஷேவாக் இருவரும் இணைந்தனர்.

இந்திய அணி ஆரம்பத்தில் ஓட்டங்களை மிக மெதுவாகவே பெற்றது. அதிரடி ஆட்டக்காரரான ஷேவாக் கூட நேற்றைய ஆட்டத்தில் நிதானத்தையே கடைப்பிடித்தார். இருந்த போதிலும் அணி 36 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில், 2 பவுண்டரிகளுடன் 17 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஷேவாக், ஒடேயோவின் பந்துவீச்சில் போல்டானார்.

இதன்பின்னர் கங்கூலியுடன் இணைந்தவர் லக்ஷ்மன். இவர்கள் இருவரும் சிறப்பான முறையில் ஆடி ஓட்டங்களை அதிகரித்தனர். இந்தநிலையில் 124 பந்துகளில் 8 பவுண்டரிகளுடன் 90 ஓட்டங்களைப் பெற்றிருந்த கங்கூலி, சுஜியின் பந்துவீச்சில் போல்டானார். அவ்வேளை அணியின் ஓட்ட எண்ணிக்கை 191 ஆக இருந்தது.

பின்னர் லக்ஷ்மனுடன் இணைந்த யுவராஜ், 9 ஓட்டங்கள் பெற்றிருக்கையில் ஒடேயோவின் பந்துவீச்சில் விக்கெட் கீப்பரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இவ்வேளை, அணியின் ஓட்ட எண்ணிக்கை 204 ஆக இருந்தது. பின்னர் கைவ், லக்ஷ்மனுடன் இணைந்தார். இவர்கள் இருவரும் சிறப்பாக விளையாடிய போதும் லக்ஷ்மன் 99 பந்துகளில் 8 பவுண்டரிகளுடன் 79 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ரிக்கோலோவின் பந்துவீச்சில் விக்கெட் கீப்பர் ஸ்ரம்ப் செய்ததன் மூலம் ஆட்டமிழந்தார். அவ்வேளை அணி 213 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்தது.

இதன்பின் கைவ்வுடன் ராவிட் இணைந்தார். இவர்கள் இருவரும் இறுதிவரை ஆட்டமிழக்காமல் அணியின் ஓட்ட எண்ணிக்கையை சடுதியாக அதிகரித்தனர். இதில் கைவ்-29 பந்துகளில் 5 பவுண்டரிகள் அடங்கலாக 49 ஓட்டங்களையும், ராவிட் - 16 பந்துகளில் ஒரு சிக்ஸர், 3 பவுண்டரிகள் அடங்கலாக 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஐம்பது ஓவர்கள் நிறைவில் இந்தியா 4 விக்கெட்டுக்களை இழந்து 290 ஓட்டங்களைக் குவித்தது. இதில கென்ய அணி 16 ஓட்டங்களை உதிரிகளாக விட்டுக்கொடுத்தது.



291 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற பெரிய இலக்குடன் பதிலுக்குக் களமிறங்கிய கென்ய அணியின் விக்கெட்டுக்கள் தொடர்ந்து வீழ்ந்த வண்ணமிருந்தன. ஐம்பது ஓவர்கள் நிறைவில் கென்ய அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இந்திய பந்து வீச்சாளர்கள் 42 உதிரிகளை விட்டுக் கொடுத்தனர்.

கென்ய அணி சார்பில் - ஷா 33, ஒடோயோ 15, ஒயுமா 49, பட்டேல் ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஹர்பஜன் 3, பதான் 2, அகர்கர் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# உலகக் கிண்ண உதைபந்தாட்ட தகுதிச்சுற்றில் ஈராக் அபாரவெற்றி



உலகக் கிண்ண கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியில் ஈராக் அணி தாய்வானை 4:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

ஜேர்மனியில் 2006 இல் உலகக் கிண்ண கால்பந்துப் போட்டி நடைபெறவுள்ளது. இதற்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் பல்வேறு இடங்களில் நடக்கின்றன. ஆசிய மண்டலத்துக்கான இரண்டாம் நிலைப் போட்டியில் கடந்த புதன்கிழமை தாய்வான் அணி ஈராக்கைச் சந்தித்தது. தாய்வானுக்கு உள்ளூர் ரசிகர்கள் ஆதரவு தந்தபோதும், ஈராக்கின் எழுச்சியைக் கட்டுப்படுத்த இயலவில்லை.

ஆசிய கிண்ண, ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் அபாரமாக செயற்பட்ட ஈராக், இந்தப் போட்டியிலும் அசத்தியது.

இந்த அணியின் சாலிக் சாலி (43 ஆவது நிமிடம்) இரண்டு கோல் அடித்தார். ஹடிப் (75 ஆவது நிமிடம்), யூனிஸ் காலிப் (86 ஆவது நிமிடம்) தலா ஒரு கோல் அடிக்க, ஈராக் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தாய்வான் சார்பில் - 82 ஆவது நிமிடத்தில் ஹுவாங் வெய் ஒரு கோல் அடித்து ஆறுதல் தேடினார். மற்றொரு போட்டியில் ஆசியாவின் வலிமைமிக்க தென்கொரிய அணி வியட்னாமை 2:1 என்ற கோல் கணககில் வென்றது. இதேபோல் வட கொரிய அணி தாய்லாந்தை 4:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

ஐரோப்பிய மண்டலத்துக்கான தகுதிச் சுற்றுப் போட்டியில் முன்னாள் உலகக் கிண்ண சம்பியன்களான பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி அணிகள் எளிதான வெற்றியைப் பெற்றன. பாரிஸில் நடந்த போட்டியில் பிரான்ஸ் அணி - பாரோ தீவுகள் அணியை 2:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

இங்கிலாந்து அணி போலந்தை (2:1) மிக எளிதாக வென்றது. பிரிவு 5 இல இடம்பெற்றுள்ள இத்தாலி அணி மால்டோவாவை 1:0 என்ற கோல் கணக்கில் போராடி வென்றது.

# இங்கிலாந்து 152 ஓட்டங்களால் சிம்பாப்வேயைத் தோற்கடித்தது



மினி உலகக் கிண்ணப் போட்டியின் நேற்றைய இங்கிலாந்து - சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 152 ஓட்டங்களால் சிம்பாப்வேயைத் தோற்கடித்தது.

நேற்றுமுன்தினம் இங்கிலாந்து அணி துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கையில் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டு நேற்று விட்ட இடத்திலிருந்து தொடரப்பட்டது. நேற்றுமுன்தினம் இங்கிலாந்து அணி 30 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 198 ஓட்டங்களைப் பெற்றிருக்கையிலே மழை குறுக்கிட்டதனால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

நேற்றைய ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 299 ஓட்டங்களைக் குவித்தது. இதில் சிம்பாப்வே அணி 34 ஓட்டங்களை உதிரிகளாக விட்டுக் கொடுத்தது.

இங்கிலாந்து அணிசார்பில் சோலங்கி 62, ஸ்ரரஸ் 25, கோலிங்வூட் ஆட்டமிழக்காமல் 80, ஜோன்ஸ் 38, ஜைல்ஸ் 23 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஹொண்டோ மற்றும் றெயின்ஸ்போட் இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், பன்யான்கரா மற்றும் சிபாண்டா இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு மிகப்பெரிய இலக்குடன் களமிறங்கிய சிம்பாப்வே அணிக்கு ஆரம்பமே சரிவாக அமைந்தது. அந்த அணி 26 ஓட்டங்களைப் பெற்றிருக்கையிலேயே நான்கு விக்கெட்டுக்களை இழந்தது. ஆனாலும், அந்த அணியால் பின்னரும் ஓட்டங்களைக் குவிக்க முடியவில்லை. அந்த அணியின் விக்கெட்டுக்கள் சீரான வேகத்தில் சரிந்த வண்ணமிருந்தன.

இறுதியில் அந்த அணி 39 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 147 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதில் இங்கிலாந்து அணி உதிரி ஓட்டங்களாக 14 ஐ விட்டுக் கொடுத்திருந்தது.

இந்த அணி சார்பில் சிபாண்டா 28, தைபு 40 (இவர் கிற் விக்கெட் முறையில் ஆட்டமிழந்தார்), சிக்கும்பாரா ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஹர்மிசன், பிளின்ரொப் இருவரும் தலா 3 விக்கெட்டுக்களையும் டரன்கோ, ஜைல்ஸ் இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.




# மினி உலகக் கிண்ணத்தை இந்திய அணி கைப்பற்றுமாம்

## அனில் கும்ளே தெரிவிப்பு



இந்திய கிரிக்கெட் அணி மினி உலக கிண்ணத்தை இந்த முறை கைப்பற்றும் என்று முன்னணி சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளே நம்பிக்கை தெரிவித்துள்ளார். பி.பி.ஸி.க்கு அளித்த பேட்டியில் இதனை அவர் கூறினார்.

இந்திய அணி இங்கிலாந்துக்கு எதிரான நட்வெஸ்ட் கிரிக்கெட் கடைசிப் போட்டியில் சிறப்பாக ஆடியது. அது நல்ல நம்பிக்கையை அளிக்கும். துடுப்பாட்டத்தில் கங்கூலி, டிராவிட், கைவ் ஆகியோர் நன்றாக ஆடினார்கள். யுவராஜ், லக்ஷ்மன், ஷேவாக் ஆகியோர் இந்தப் போட்டியில் சிறப்பாக ஆடுவார்கள் என்று உறுதியாக நம்புகிறேன். திறமை வாய்ந்த இந்திய அணி சிறப்பாக ஆடி கிண்ணத்தைக் கைப்பற்றும் என்று கும்ளே கூறினார்.



**மினி உலகக் கிண்ணத்தில் இன்று நடைபெறும் ஆட்டம்**
**தென்னாபிரிக்கா - பங்களாதேஷ்**
**மைதானம் - எட்ஜ்பாஸ்டன்**

# இரட்டையர் இறுதிப் போட்டியில் லியாண்டர் பெயஸ் ஜோடி படுதோல்வி

(நியூயோர்க்)

அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டியின் ஆண்கள் இரட்டையர் பிரிவில் லியாண்டர் பெயஸ் - டேவிட் ரிகில் ஜோடி இறுதிப்போட்டியில் தோற்றது.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் ரெனிஸ்போட்டி நியூயோர்க்கில் நடந்து வருகிறது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் தற்போதைய சம்பியன் ஆன்டி ரோட்டிக் (அமெரிக்கா) அதிர்ச்சித் தோல்வியடைந்தார். சுவீடன் வீரர் ஜோஷிம் ஜோகன்டன் 6:4, 6:4, 3:6. 2:6, 6:4 என்ற செட் கணக்கில் ரோட்டிக்கை வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி தேடிக்கொண்டார்.

ஆண்களுக்கான இரட்டையர் பிரிவு அரை இறுதியில் லியாண்டர் பெயஸ் (இந்தியா) டேவிட் ரிகில் ஜோடி ஸ்பெயினைச் சேர்ந்த ராபெல் நாடல் - டாமிரோப்ரெடோ ஜோடியை எதிர்கொண்டது. இதில் லியாண்டர் பெயஸ் - டேவிட்ரிகில் ஜோடி 6:3, 6:3 என்ற நேர்செட்டில் வெற்றிவெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இறுதிப் போட்டியில், லியாண்டர் பெயஸ் - டேவிட்ரிகில் ஜோடி, மார்க் நோலெஸ் (பகாம்ஸ்) - டேனியல் நெஸ்டோர் (கனடா) ஜோடியுடன் மோதியது. இதில் லியாண்டர் பெயஸ் - டேவிட்ரிகில் ஜோடி 3:6, 3:6 என்ற நேர் செட்டில் மார்க் நோலேஸ் - டேனியல் ஜோடியிடம் தோல்வி கண்டது.

# அமெரிக்க ஓபன் ரெனிஸ் இறுதிப் போட்டியில் ரஷ்ய வீராங்கனைகள்





(நியூயோர்க்)

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் ரெனிஸ் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது.

இதன் பெண்களுக்கான அரையிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன. இதன் ஒரு ஆட்டத்தில் உலகின் 5 ஆம் நிலை வீராங்கனையான டேவன்போர்ட், ரஷ்ய வீராங்கனை சுவேட்லனா குனஸ்ட்டாவை எதிர்கொண்டார்.

இதில் டேவன் போர்ட், சுவேட்லனாவிடம் 6:1, 2:6, 4:6 என்ற செட் கணக்கில் அதிர்ச்சிகரமாகத் தோல்வியடைந்தார்.

மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் கேப்ரியாட்டி (அமெரிக்கா) யும், எலீனா டிமேன்ட்டிவாவும் (ரஷ்யா) மோதினார்கள். இதில் கேப்ரியாட்டி 0:6, 6:2, 6:7 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்தார்.

இறுதிப் போட்டியில் ரஷ்ய வீராங்கனைகளான சுவேட்லனாவும், எலீனா டிமேன்ட்டிவாவும் மோதுகிறார்கள்.

# மினி உலகக் கிண்ண கிரிக்கெட் காயம் காரணமாக பாலாஜி விலகல்

(லண்டன்)

மினி உலக கிண்ண கிரிக்கெட் போட்டியிலிருந்து இந்திய அணி வேகப்பந்து வீச்சாளர் எல். பாலாஜி காயம் காரணமாக விலகி யுள்ளார். அவருக்குப் பதிலாக அமித் பண்டாரி சேர்க்கப்பட்டுள்ளார்.



அடிவயிற்றுப் பகுதியில் தசைப்பிடிப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து எல்.பாலாஜி இந்தப் போட்டியில் இருந்து விலகியுள்ளார். இதனை இந்திய அணி கப்டன் கங்கூலி தெரிவித்தார்.

பாலாஜிக்குப் பதிலாக அணியில் மாற்று வீரரைச் சேர்க்க - இந்திய கிரிக்கட் அணி நிர்வாகம் கேட்டு இருப்பதாகவும், யாரை சேர்ப்பது என்று சபையின் முடிவுக்கு விடப்பட்டு இருப்பதாகவும் கங்கூலி தெரிவித்தார்.

லண்டனில் கடந்த 7ஆம் தேதி பாலாஜிக்கு மருத்துவ சிகிச்சை அளித்தும் இதுவரை உடல் நலத்தில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்றும் அவர் கூறினார்.

எல்.பாலாஜிக்கு பதிலாக டெல்கியை சேர்ந்த வேகப்பந்து வீச்சாளர் அமித்பண்டாரி அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். அணி நிர்வாகம் கேட்டு கொண்டதைத் தொடர்ந்து தேர்வாளர்களுடன் கலந்துபேசி அமித் பண்டாரி தேர்வு செய்யப்பட்டதாக இந்திய கிரிக்கெட் சபை செயலாளர் எஸ்.கே.நாயர் தெரிவித்துள்ளார்.

### ஜனாதிபதி விருது - 2003

# முதலீட்டாளர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

இலங்கையில் மிகச் சிறப்பாக இயங்கும் கைத்தொழில்களை ஊக்குவித்து மேம்படுத்தும் முகமாக, சிறந்த முதலீட்டாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு ஜனாதிபதி விருது 2003 ஆம் ஆண்டு வழங்க, சிறிய மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்திச் சபைக் கூடாக ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

இந்த விருதுக்காக விண்ணப்பிக்க விரும்பும் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழிலாளர்கள் - தமது விண்ணப்பங்களை நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பாக, தத்தமது பிராந்திய கைத்தொழில் அபிவிருத்திச் சபை அலுவலங்களுக்கு அனுப்பி வைக்குமாறு இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச்சபை அறிவித்துள்ளது.

இவை தொடர்பான மேலதிக தகவல்களை யாழ்ப்பாணம் சுண்டிக்குழியிலுள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபைக் கட்டடத் தொகுதியில் இயங்கும் - இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிராந்திய அலுவலகத்தில், அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்றும், அல்லது 021-222 2421 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டும் பெற முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (31)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயம்

(வடமராட்சி)

மந்திகை மடத்தடிச்சந்திப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

மந்திகை மடத்தடிப் பகுதியில் எதிரெதிரே வந்த இருமோட்டார் சைக்கிள்கள் - நேருக்குநேர் மோதிக் கொண்டதில், மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர்களான கிருஷ்ணபிள்ளை இராசதுரை, குலரட்ணம் சிவபாதம் ஆகியோர் காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# மானிப்பாயில் இலவச வைத்திய பரிசோதனை

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன், லயன் டொக்டர் சி.சிவராஜசிங்கரின் ஏற்பாட்டில் இன்று நவாலி வை.எம்.சி.ஏ. காரியாலய வளாகத்தில், காலை 9 மணி முதல் 1 மணி வரை வைத்திய பரிசோதனைகள் நடைபெறவுள்ளன.

இதன்படி நவாலி வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கைச் சேர்ந்த பகுதி மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் சலரோகம், இரத்த அழுத்தம் மற்றும் ஏனைய நோய்களுக்கு இலவசமாக பரிசோதனைகள் செய்யப்பட்டு, மருந்துகளும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், இந்தப் பகுதியைச் சேர்ந்த பார்வை குறைபாடு உடையவர்களுக்கு கண்பரிசோதனை செய்யப்பட்டு, இலவசமாக கண்ணாடிகள் வழங்குவதற்குரிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இந்த நிகழ்வில் கூடிய வரையில், நோயாளிகள் வந்து உரிய பயனைப் பெற்றுக்கொள்ளுமாறு லயன்ஸ் கழகம் அறிவித்துள்ளது. (100)



சங்கானை மாவடி இந்து இளைஞர், மகளிர் மன்ற 5 ஆம் ஆண்டு நிறைவு விழாவில், இந்து கலாசார திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். (91)



கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் நடைபெற்ற தமிழ்த்தின விழாவில் பாடசாலை அதிபர் எஸ்.சண்முககுமார் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (82)

# ஆட்டுப்பட்டிக் கிராமத்தில் பொதுநோக்கு மண்டபம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில், நிகொட் நிறுவனத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபத் திறப்பு விழா - நேற்றுமுன்தினம் துன்னாலை ஆட்டுப்பட்டிக் கிராமத்தில் நடைபெற்றது.

இதில் ஆரம்ப நிகழ்வாக மங்கள விளக்கை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன், வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா, கரவெட்டி பிரதேச செயலர் சத்தியசீலன், யாழ்.மாவட்ட நிகொட் நிறுவனப் பணிப்பாளர் நவரட்ணராஜா ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து - பொது மண்டபத்தை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தலைவர் தலைமையில் நடந்த நிகழ்வில் சிறப்புரைகளை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர்.

## பிரதேச செயலர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உதவி அரச அதிபர்கள், பிரதேச செயலர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று - எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக, யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் அ.சிவசாமி தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகள் உட்பட, சகல நடவடிக்கைகள் குறித்தும் இதில் ஆராயப்படும் எனத் தெரிவித்தார். (ப)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்



பெயர் : சு.சுஜிந்தா
முகவரி : மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்

# அபிவிருத்தி கூட்டிணைப்பாளர்களுக்கு வினைத்திறன்காண் தடைப் பரீட்சை

அரசாங்கத்தின் முன்னுரிமைச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் ஆற்றல்களை மேம்படுத்துவதற்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட பட்டதாரி பயிலுநர்களை - நிரந்தர பதவிகளில் இணைப்புச் செய்தல் தொடர்பாக, வினைத்திறன் காண் தடைப் பரீட்சை நடத்தப்படவுள்ளது. நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளரால் வெளி யிடப்பட்ட படி 1/29/ஏ இலக்க 25.07.2000 ஆம் திகதிய சுற்றறிக் கைக் கடிதத்தின் 83 ஆம் பந்தியின்படி, அப்போதைய அரசாங்க உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரால் நியமனம் செய்யப்பட்ட அபிவிருத்தி கூட்டிணைப்பாளருக்கே இந்தப் பரீட்சை நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகள் உரியமுறையில், விண்ணப்பத்தைத் தயாரித்து, எதிர்வரும் டிசம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவு, பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை. என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில், பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். இதற்கான பரீட்சை - கொழும்பில் பரீட்சை ஆணையாளரால் நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மேலதிக விபரங்களைக் கடந்த 10 ஆம் திகதி வெளிவந்த அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (100)

# சுற்றுச்சூழல் முகாமைத்துவ பிரிவு மாநகரசபையில் அமையவுள்ளது

நகர அபிவிருத்தி நீர் வழங்கல் அமைச்சினால், யாழ். மாநகரசபையில் சுற்றுச்சூழல் திட்ட முகாமைத்துவத்துவப் பிரிவு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கென புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு, அந்தக் கட்டடத்தில் முகாமைத்துவப் பிரிவு இயங்கும் எனவும், இது நகரத்தின் பிரதான சுகாதார, கழிவகற்றல் தொடர்பான பணிகளை மேற்கொண்டு வரும் எனவும் யாழ். மாநகரசபையின் ஆணையாளர் கலாநிதி குணராசா தெரிவித்தார்.

இந்தப் பிரிவை வழிநடத்த, நகர அபிவிருத்திக்குழு ஒன்று அமைக்கப்படவுள்ளதாகவும், அதில் பிரிவு நிர்வாகிகளோடு நகரத்தின் பிரதான துறைசார் பிரமுகர்களும் அங்கம் வகிப்பார்கள் எனவும், இதனால் மக்கள் பல்வேறு வழிகளிலும் நன்மையடைவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கட்டுடை - அரசடி வீதிக்கு 25 வருடமாக மின்சாரம் இல்லை

(யாழ்ப்பாணம்)

கட்டுடை -அரசடி விநாயகர் வீதிக்குக் கடந்த 25 வருடங்களாக மின்சாரம் வழங்கப்படவில்லையென, கட்டுடை மஹா சனசமூக நிலையத்தினரால் மானிப்பாய் பிரதேசசபையின் செயலாளர் விக்டரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன்படி - பிரதேசசபையின் செயலாளர், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிட்ட பகுதிக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கும்படியும், அந்தப் பகுதி மக்களின் கல்வி, பிரதேசத்தின் வளர்ச்சி, அபிவிருத்தி போன்றவற்றைக் கருத்திற்கொண்டு, நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுள் ளார்.

இந்தக் கிராமத்தின் வளர்ச்சி கருதி 5 மின்கம்பங்களை அரசடி விநாயகர் வீதிக்கு வழங்குவதற்கு, மானிப்பாய் பிரதேசசபை திட்டமிடற் பிரிவு நடவடிக்கை எடுத்து வருவதாகச் சபையின் உள்ளூராட்சி உதவியாளர் தெரிவித்தார். (100)

# இலவச மருத்துவ முகாம் மூலம் 500 இற்கும் மேற்பட்டோர் நன்மை

(யாழ்ப்பாணம்)

தியாகி அறக்கொடை நிறுவனத்தினர் நடாத்துகின்ற இலவச மருத்துவ முகாமின் மூலம், கடந்த இரண்டு மாதங்களில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட நோயாளிகள் பயனடைந்துள்ளனர்.

நலிவுற்ற மக்களின் மேம்பாட்டுக்காக கல்வி, சுகாதாரம் மற்றும் பொருளாதார உதவிகளை நல்கிவரும் தியாகி அறக்கொடை நிறுவனத்தினர் - மாதந்தோறும் பின்தங்கிய பிரதேசங்களுக்குச் சென்று இலவச மருத்துவ முகாம்களை நடத்தி வருகின்றனர்.

கடந்த ஆறு மாதகாலமாக நடைபெற்ற மருத்துவ முகாமின் நோயாளிகள் - இலவச சிகிச்சை பெற்றுள்ளதாக அறக்கொடை நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

# சொந்தப் பிரதேசங்களிலேயே வாக்காளர் இடாப்பு பதிவுகள்!

புதிதாக வாக்காளர்களாகத் தம்மை இணைத்துக்கொள்பவர்கள், ஏனையோரும் தமது சொந்தப் பிரதேசங்களிலேயே விண்ணபிக்க வேண்டும் என, யாழ். செயலக தேர்தல் திணைக்களத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

நாட்டில் வாழும் 18 வயதுக்கு மேற்பட்ட சகல மக்களும், வாக்காளர்களாகத் தம்மை இணைத்திருத்தல் அவர்களது அரசியல் உரிமையாகும்.

இந்த வாக்காளர் பதிவுகளைச் சிலர் தமது சொந்தப் பிரதேசங்களில் மேற்கொள்ளாமல், தாம் தற்காலிகமாக வசிக்கும் பிரதேசங்களிலேயே பதிவுசெய்து கொள்கின்றார்கள். இதனால், தேர்தல் காலங்களில் பலத்த சிரமங்கள் ஏற்படுவதாக தேர்தல் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இனிவரும் காலங்களில் மீளக் குடியமர வசதியிருந்தும், வேறு பிரதேசங்களில் தற்காலிகமாக குடியிருப்பவர்கள் - தமது சொந்தக் கிராம அலுவலர் பிரிவுகளிலேயே வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதியோர்கள் தொடர்பான விபரங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

ஒக்ரோபர் முதலாம் திகதி கொண்டாடப்படவுள்ள முதியோர் தினத்தை முன்னிட்டு, வடக்கு-கிழக்கு மாகாண சமூகநலத்துறை திணைக்களத்தால் முதியோர் தொடர்பான விபரங்கள் திரட்டப்படுவதுடன், பல்வேறு நிகழ்வுகளும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்ட அரச அதிபருக்கு இது குறித்து அந்தத் திணைக்களத்தால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

யாழ்.மாவட்டத்தில் தங்கிவாழும் முதியோர்களது விபரங்கள் திரட்டப்படுவதுடன், சிறந்த முதியோர்களாகச் சிலர் தெரிவுசெய்யப்படவும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தெரிவுகள் பிரதேச ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் அமையும்.

இதேவேளை வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சிறந்த முன்னோடிகளான சமூக பொறுப்புணர்வு மிக்க மூன்று முதியவர்கள் தெரிவுசெய்யப்பட்டு, கௌரவிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# விளையாட்டு அரங்கம்




## தூசு நிறைந்த கண்கள்



பிறைன் லாறா
என்றும் நியூ

சர்வதேச கிரிக்கெட் போட்டியில் ஆசிய மற்றும் கறுப்பின வீரர்கள் உலக சாதனை செய்வதை வெள்ளையின வீரர்களும் வெள்ளையின நடுவர்களும் விரும்புவதில்லைப் போல்தான் அவர்களது வாய்ச்சொல்லும், செயல்களும் எடுத்துக்காட்டுகின்றன.

இதிலும் அவுஸ்ரேலிய அணிவீரர்களும், அந்நாட்டு நடுவர்களுமே சேறு பூசுவதில் முக்கிய பங்கை வகிக்கின்றார்கள் என்று கூறினால் மிகையாகாது.

இலங்கை அணி வீரர் முரளிதரன் மீது சுமத்தப்பட்டுள்ள முதல் குற்றச்சாட்டிலிருந்து இன்று இந்திய அணிவீரர்கள் வரை வசைமாரி பொழியச் செல்லுமளவிற்கு அவுஸ்ரேலிய வீரர்களும், நடுவர்களும் அப்படி ஏன்தான் பொறாமைப்படுகிறார்களோ தெரியவில்லை. இதில் வேடிக்கை என்னவெனில் இவர்களது குற்றச்சாட்டிற்கு மத்தியிலும் ஆசிய மற்றும் கறுப்பின வீரர்கள்தான் சர்வதேச கிரிக்கெட்டில் உலக சாதனையை நிலை நாட்டி வருகின்றார்கள்.

அண்மையில் அவுஸ்ரேலிய அணியின் ஆரம்ப வீரர் மத்தியூ ஹெய்டன் கூறியுள்ளார். இந்திய வீரர்கள் 80, 90 ஓட்டங்கள் எடுத்தவுடன் தமது சாதனைக்காக ஆட்டத்தைப் பின்னர் மெதுவாகவே ஆடுவார்களென்றும், அவர்களுக்கு தமது தனிப்பட்ட சாதனைகளே முக்கியமெனவும், ஆனால் தமது அணியில் அப்படி எவரும் இல்லை எனவும் தெரிவித்திருக்கிறார். இவ்வாறு கூறிய ஹெய்டன்தான் சிம்பாப்வேயுடனான டெஸ்ட் போட்டியில் லாறாவின் சாதனையை முறியடித்து 380 என்ற புதிய சாதனையை நிலைநாட்டியவர். ஏன் இவர் நினைத்திருந்தால் வலுக்குறைந்த சிம்பாப்வே அணியுடன் இந்த சாதனையை நான் புரியக்கூடாதென அதன் தற்போதைய வீரர்கள் எதனையும் சாதிக்கவில்லை. அதகள் சாதனைகள் படைக்கும் அறியாமல் எரிச்சல் வருகிறது.

ஆசியாவை எடுத்துக்கொண்டால் வசீம் அக்ரம் ஒருநாள் போட்டிகளில் அதிகூடிய 502 விக்கெட்டுக்களைக் கொய்தவர். சச்சினைப் பற்றிக் கூறவே தேவையில்லை. முரளி டெஸ்ட் போட்டிகளில் முறியடிக்க முடியாதவராக உள்ளார்.

கறுப்பின வீரர் லாறா டெஸ்ட் போட்டிகளில் 400 ஓட்டங்கள் ஆட்டமிழக்காமல், அத்துடன் குறைந்த டெஸ்ட் போட்டிகளில் பத்தாயிரம் ஓட்டங்களைக் கடந்த முதல் வீரர்.

இவ்வாறு சாதனைப்பட்டியல் நீண்டுசெல்வது தான் இவர்களுக்குப் பிடிக்கவில்லை. இதில் குறிப்பிடவேண்டிய விடயம் என்னவெனில், சாதனை படைக்கும் வீரர்களே உலகில் அனைவராலும் பேசப்படுவார்கள் என்பதுதான்.

அவுஸ்ரேலியாவின் முன்னாள் வீரர் டொன்பிரட்மன் கூட அவர் புரிந்த சாதனைகளுக்காகவே, அவர் மறைந்த பின்னரும் இன்று வரை நினைவு கூரப்படுகிறார் என்பதை அவுஸ்ரேலிய வீரர்கள் ஏற்றுக் கொள்வார்களா?

ஆட்டத்தை இடைநிறுத்தியிருக்கலாமல்லவா? இவருக்கு ஒரு நியாயம் மற்றவருக்கு ஒரு நியாயமா?

இதே ஹெய்டனின் சாதனையை பிரைன்லாறா வலுவான இங்கிலாந்துடனான போட்டியில் முறியடித்து ஆட்டமிழக்காமல் 400 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்தியபோது உலகமே லாறாவைப் புகழ்ந்து பாடும் போது அவுஸ்ரேலிய வீரர்கள் மட்டும் வசைமழை பொழிந்தனர்.

இதில் கில்கிறிஸ்ட் லாறாவின் சாதனையை ஹெய்டன் விரைவில் முறியடிப்பார் என்றார். அடுத்து பொண்டிங் கூறினார் - லாறா தனிப்பட்ட சாதனைகளுக்காக அணியைத் தோல்விக்கு இட்டுச்சென்றார் என்றார்.




சாதனைகள் படைக்கும் சந்தர்ப்பங்கள் இருக்கும் போது அதனை செய்தே தீரவேண்டும். அவுஸ்ரேலிய அணி எவ்வளவு வலுவானதாக இருந் தாலும் உலக அளவில் பேசப்படுமளவிற்கு னாலேயே அவர்களுக்கு மற்ற வீரர் போது தம்மையும்

இறுதியாக என்னதான் வலுவான அணியாக அவுஸ்ரேலியா இருந்த போதிலும் ICC யின் சிறந்த அணித்தெரிவில் நியூஸிலாந்து அணியே தெரிவு செய்யப்பட்டுள்ளதையும் அவுஸ்ரேலிய வீரர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

- யசோ.

## தம்பட்டம் இல்லாமல் தட்டிச் சென்றவர்கள்

2004 ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளை கிரேக்கம் மிக வெற்றிகரமாக நடாத்தி முடித்தது. ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த அந்த 17 நாட்களிலும் உலகமெங்கும் ஏதென்ஸ் என்ற பெயரே நீக்கமற நிறைந்திருந்தது. ஆனால், இதனிடையே சீனா மெல்லத் தடம் பதித்து 2004 ஒலிம்பிக் போட்டிகளின் முதலாவது தங்கம் வென்று அதன் பின் போட்டியின் இறுதிநாள் வரை அதிரடியாகப் பதக்கங்களைக் குவித்த பிரமிப்பு இன்னமும்தான் நீங்கவில்லை. இன்றும் உலகெங்கும் பேசப்படுவது ஏதென்ஸ் அல்ல, சீனா தான்.



தொங்கும் தங்கங்கள்

சீனாவைப் பொறுத்து தடகளப் போட்டிகள் தவிர்ந்த ஏனைய நிகழ்வுகளில் தான் கூடிய பதக்கங்கள் அள்ளுவது வழக்கம். ஆனால், இம்முறை 110 மீற்றர் தடை தாண்டல் ஓட்டம், மற்றும் 10000 மீற்றர் ஓட்டம் இரண்டிலும் சீனா தங்கம் வென்றது - அவர்கள் 2008 இல் தடகள மண்ணில் தடகள நிகழ்வுகளில் வித்தியாசமாகச் செய்யப் போகிறார்கள் என்பதைக் கட்டியங் கூறி நிற்கின்றது.

இன்னொன்று, ஏதென்ஸ் சென்ற பெரும்பான்மையான வீர வீராங்கனைகள் இருபது வயதுக்கும் குறைந்தவர்கள் 2008 இல் இவர்களும், இன்னும் இருபது வயதுக்குக் குறைந்த புதுமுகங்களும் ஒன்று சேரும் போது எப்படி இருக்கும் என்று சிந்திக்கும் போதே பலருக்கு யோசனை தொட்டுவிடும் என்று நம்பலாம்.

என்றாலும் சீன ஒலிம்பிக் குழுவின் தலைவர் யுவான் வீமின் கருத்துக்கூறுகையில் இன்னும் நிறையவே கற்கவேண்டியிருக்கிறது. இடைவெளிகள் நிரம்பவே இருக்கின்றன என்று அடக்கமாகக் கூறுகிறார். என்ன விதமாகச் சிந்திக்கிறார் என்பதற்கு ஒரு உதாரணம் குறுகிய வருடங்களிலேயே வேகமான முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம் என்பது உண்மைதான். ஆனால், ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மனி, ரஷ்யா போன்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது நாங்கள் சிலவகை நிகழ்வுகளில் பின்தங்கியே இருக்கிறோம் என்பவர் தடகளப் போட்டிகளையே குறிப்பிடுகிறார் என்று கொள்ளலாம்.

அந்தக் குறைபாட்டை நீக்கவும் சீனா செயலில் இறங்கிவிட்டது. ஆச்சரியமாக இருக்கும். ஆனால், மைக்கல் ஜோன்சன் சீனாவில் நிற்கிறார் என்பதே உண்மை. அதுமட்டுமன்றி உதைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் போன்றவற்றின் மேற்குலகப் பயிற்றுனர்கள் தற்போது சீனாவில் தம் கடமையை ஆரம்பித்துவிட்டார்கள்.

மொத்தத்தில் பார்க்கும்போது 2002இல் உலகை வியக்க வைத்த சீனாவை விட 2008 இல் வித்தியாசமான சீனாவை விளையாட்டு ரசிகர்கள் காணப்போகிறார்கள். அந்த அலையில் முன்னணி நாடுகள், பின் தங்கிய நாடுகள் எல்லாம் சீனாவிடம் நிறையவே இழக்கப் போகின்றன என் பதுமட்டும் உண்மை. சீனாவின் எழுச்சி ஆசியக் கண்ட மக்களின் பெரும் எழுச்சி என்பதில் சந்தேகம் இல்லை.

- மகடலின்.



பொன் சிரிப்பு

## குற்றம் குற்றமே

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் 100 மீற்றர் ஓட்டத்தில் பங்குகொள்ளவெனச் சென்ற சுசந்திகா ஜயசிங்க, அங்கு சென்று கால்பதித்ததும், அதன்பின் தனது உபாதைகளால் அந்த நிகழ்வில் கலந்துகொள்ள மறுத்துவிட்டதும் இலங்கையில் பெரும் சர்ச்சையை எழுப்பி இருந்தன. இது தொடர்பில் ஊடகங்கள் எல்லாமே இவர் மீது அதிருப்தியான கருத்துக்களையே தெரிவித்திருந்தன. ஒரு முதன்மை விளையாட்டு நபர், தான் பிறந்த நாட்டுக்கு உயர்ந்த பெருமை தேடித்தந்தார் என்றதும், நாடு முழுவதுமே அவரைக் கொண்டாடியது. அவரது பொருளாதார நிலையை மிக உயர்ந்த நிலைக்கு வளப்படுத்தியது. அது மிகவும் நியாயமே. இதன் தொடர்ச்சிகாகவே 2004 ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியிலும் பங்குகொண்டு இவர் பெருமை தேடித்தருவார் என்ற எதிர்பார்க்கையில் நாடு நிறையவே அவருக்குச் செய்தது. ஆனால் எல்லாம் கசப்பான முடிவை எட்டியபோது அவர் மீது கொண்ட கோபமும் ஆதங்கமும் வேறு திசையில் முட்டிமோதுகிறது. இவர் ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளின் முன்னதாக பெற்றுக்கொண்ட நிதிவளங்கள் ஒரு பத்திரிகையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. முதன்மை பெற்றவர் ஒரு பதக்கத்தை இம்முறையும் பெறவேண்டும் என்ற நோக்கில் இவரது தேவைகளுக்காக ஜனாதிபதி நிதியத்தில் இருந்து ஐம்பது இலட்சம் ரூபா வழங்கப்பட்டிருந்தது. இன்னும் இரண்டு வர்த்தக நிறுவனங்கள் இருபத்தைந்து லட்சம் மற்றும் பன்னிரண்டு இலட்சம் ரூபாய்கள் என்று 2002 செப்ரெம்பரின் பின் இவருக்கு வழங்கி இருந்தன. இலங்கைத் தடகளச் சம்மேளனம் பதினேழு இலட்சம் ரூபாய்களை 2002 க்கும் 2004 க்கும் இடைப்பட்ட காலத்தில் இவருக்கு வழங்கி இருந்தது. மேலும் விளையாட்டுத்துறை அமைச்சு ஒன்பது இலட்சம் ரூபாய்களையும் இவரின் மருத்துவச் செலவினத் தேவைகளுக்காக இரண்டரை இலட்சம் ரூபாய்களையும் வழங்கி இருந்தது. இதற்கெல்லாம் மேலதிகமாக ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ளப் பயிற்சி பெறுமுகமாக மேலும் ஒரு பதின்னான்கு இலட்சம் ரூபா பெற்றிருக்கிறார். மொத்தத் தொகை எங்கேயோ போய் நிற்கிறது. சுசந்திகா முறையான பயிற்சிகள் பெற்று ஏதென்ஸ் சென்று பரிபூரண உண்மைத் தன்மையுடன் போட்டியிட்டு பதக்கம் வெல்லாவிட்டாலும் பரவாயில்லை, தன் அர்ப்பணிபபையும் திறமையையும் காட்டியிருந்தால் மேற் சொன்ன எதுவுமே ஒரு பொருட்டல்ல. இதைவிடக் கூடக்கொடுத்தால் தான் என்ன? ஆனால் நடந்து போன நிகழ்ச்சிகளின் பரிமாணம் நாடு உனக்கு இவ்வளவு செய்ததே. நீ நாட்டுக்கு என்னம்மா செய்துவிட்டாய் என்றல்லவா கேட்கவைத்து விட்டது.



சுசந்திகா

- நிர்மலன்.

# உண்மை வெளித்தே தீரும்


சச்சின் சொல்லாமலே

ஹொலண்டில் நடைபெற்று முடிந்த முத்தரப்பு ஒருநாள் தொடருக்கு தொலைக்காட்சி வர்ணனை யாளராக கடமையாற்ற வந்த தென்னாபிரிக்க அணியின் முன்னாள் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான பேரி ரிச்சட்ஸ், உலகின் தலை சிறந்த துடுப்பாட்ட வீரராக சச்சின் டெண்டுல்கரே தொடர்ந்தும் நீடித்து வருகின்றார் என்று கூறியிருந்தார்.

டெண்டுல்கரின் துடுப்பாட்டம் குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் பேரி ரிச்சட்ஸின் இந்தக் கருத்து முத்தாய்ப்பாக அமைந்துள்ளது.

இந்திய அணியின் முன்னாள் தலைவர் அசாருதீன் டெண்டுல்கர் தற்காப்புப் பாணியை கைவிட்டு பந்து வீச்சாளர்களைக் கட்டுப்படுத்தும் அதிரடிப்பாணியைக் கைக்கொள்ளவேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆனால் இன்னொரு முன்னாள் தலைவரான சுனில் கவாஸ்கரோ நடந்து முடிந்த ஆசியக் கிண்ணத் தொடரில் அணியின் மற்றைய வீரர்கள் ஒத்துழைப்பு வழங்காமையினாலேயே அவரால் திறமையை சரியாக வெளிப்படுத்த முடியாமற் போய்விட்டது என்று கூறியிருந்தமையும் மனம் கொள்ளத்தக்கது.

இவை ஒரு புறமிருக்க பேரி ரிச்சட்ஸ் தொடர்ந்து கூறுகையில் - விக்கெட்டைச் சுற்றி அனைத்துக் கோணங்களிலும் பந்தை அடிக்கும் திறமை உடையவராக இருக்கும் டெண்டுல்கருக்கு வயது ஏறுவதால் முன்பைவிட தற்போது ஸ்கொயர் திசையில் அதிகமான ஷொட்களை விளையாட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது எனவும், இளம் வீரர்களைப்போல் கண்ணில்படும் பந்துகளை எல்லாம் ஷொட்டாக மாற்றிவிட முடியாது. பந்துகளை லேசாக ஷொட் அடிப்பதைவிட அதுவரும் வேகத்தில் திருப்பி விட்டு அதிக ஓட்டங்கள் பெறுவது நல்லது என்றும் கூறியுள்ளார்.

இதே ரிச்சட்ஸ்தான் சில வருடங்களுக்கு முன்னர் ஆசிய நாட்டு வீரர்கள் சொந்த மைதானங்களிலேயே சிறப்பாக செயற்படுபவர்கள் எனவும், தென்னாபிரிக்க அவுஸ்ரேலிய மேற்கிந்திய தீவுகள் போன்ற பந்துகள் வேகமாய் எகிறி வரும் ஆடுகளங்களில் அவர்களால் நிலைத்துநின்று ஓட்டங்களைக் குவிக்கமுடியாது எனவும் கூறி, ஆசிய நாட்டு வீரர்களையே 'செத்தகள வீரர்கள்' எனவும் குற்றஞ் சாட்டியிருந்தார்.

இன்று அவரே ஆசியாவைச் சேர்ந்த சச்சின் டெண்டுல்கரை தலைசிறந்த வீரராக குறிப்பிட்டிருப்பது, வசிட்டர் வாயால் பிரம்மரிஷிப் பட்டம் பெற்றதைப் போன்றதாகும்.


பேரி ரிச்சட்ஸ் சொன்னது நீதானா?

இந்த வகையில் டெண்டுல்கருடைய டெஸ்ட் போட்டிகளை எடுத்துக்கொண்டால் இதுவரை அவரால் பெறப்பட்ட 33 சதங்களில் 18 சதங்கள் வெளிநாட்டு மண்ணிலேயே பெறப்பட்டதுடன், 9470 மொத்த ஓட்டங்களில் 5205 ஓட்டங்கள் வெளிநாட்டிலேயே பெறப் பட்டன.

அவ்வாறே ஒருநாள் போட்டிகளை எடுத்துக் கொண்டால் அவர் அடித்த 37 சதங்களில் 23 சதங்கள் வெளிநாட்டு ஆடுகளங்களிலேயே குவிக்கப்பட்டிருக்கின்றமையும் குறிப்பிடத் தக்கது.

அத்தோடு டெண்டுல்கருடைய அதி கூடிய டெஸ்ட் ஓட்டமான 241 ஓட்டங்களும் அவுஸ்ரேலியாவின் சிட்னி மைதானத்தில் ஆட்டமிழக்காமல் பெறப் பட்டதே. மேலும் தென்னாபிரிக்காவில் நடந்து முடிந்த உலகக் கிண்ணப் போட்டியிலும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 673 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத் தொடர்நாயகன் விருது பெற்றதும், ரிச்சட்ஸ் கூறிய அதே எகிறி வரும் ஆடுகளங்களில்தான். எனவே ஆசிய நாட்டு வீரர்கள் அனைவருமே 'செத்தகள வீரர்கள்' இல்லை என்பதையும் டெண்டுல்கர் போன்ற விதிவிலக்கானவர்களும் உள்ளனர் என்பதையும் பேரி ரிச்சட்ஸ் போன்றவர்கள் புரிந்துகொண்டால் சரி.

\- விமலன்.

# தலை நடுக்கம் தான் காரணமா?


ஷேவாக் ஏன் கலவரம்

இங்கிலாந்து அணியுடனான நட்வெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணியிடம் பறிகொடுத்ததன் மூலம் ஆசியக் கிண்ணப் போட்டியின் பின்னர் மீண்டும் ஒரு தோல்வியைச் சந்தித்துள்ளது இந்திய அணி.

மூன்று போட்டிகளைக் கொண்ட நட்வெஸ்ட் தொடரில் இறுதிப் போட்டியை மட்டுமே இந்திய அணியால் வெல்லமுடிந்தது.

பலம்வாய்ந்த துடுப்பாட்ட வீரர்களைக் கொண்ட இந்திய அணியைப் பொறுத்தவரையில் லோட்சில் இடம்பெற்ற இறுதிப் போட்டியை வென்றது ஒன்றும் மகத்தான விடயமல்ல.

ஷேவாக், கங்குலி, ராவிட், லக்ஸ்மன், கைவ், யுவராஜ்சிங் என துடுப்பாட்டப் பட்டாளத்தைக் கொண்டுள்ள இந்திய அணி துடுப்பாட்டத்தில் சோபிக்காதது கவலைக்குரியவிடயமே. நடந்து முடிந்த மூன்று போட்டிகளிலும் இந்தியஅணி முறையே 170, 237, 204 என்ற ஓட்டங்களையே பெற்றுக்கொண்டது.

வழமையாக இந்திய அணி தோல்வியைச் சந்திக்கும் சந்தர்ப்பங்களில் பந்து வீச்சாளர்களே குற்றஞ்சாட்டப் படுவார்கள். ஆனால் இத்தொடரைப் பொறுத்தவரையில் இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர்களே தோல்விக்கு காரணமாக இருந்துள்ளார்கள்.

இந்திய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் ஷேவாக்கின் ஆட்டம் மிகவும் மோசமாகவே காணப்படுகின்றது. அண்மைய காலங்களில் இவரது ஆட்டம் மிகவும் மோசமாகவே அமைந்துள்ளது. கடந்த மார்ச்சில் கராச்சியில் பாகிஸ்தான் அணிக்கு எதிராக 79 ஓட்டங்களைப் பெற்றதன் பின்னர் இடம்பெற்ற 14 ஆட்டங்களில் முறையே 26, 13, 26, 20, 00, 37, 16, 01, 81, 05, 17, 04, 00 ஓட்டங்களையே பெற்றுள்ளார். இந்த நிலையில் இவரை ஆரம்பத்துடுப் பாட்டக்காரராக களமிறக்குவது இந்திய அணியின் தற்போதைய நிலையில் உகந்ததல்ல.


கங்கூலி நொண்டுகிறது சிங்கம்

இதேசமயம், ஏனைய வீரர்களும் துடுப்பாட்டத்தில் சோபிக்கத் தவறி வருகின்றனர். கைவ் இரண்டு போட்டிகளிலும் தனது பங்களிப்பைச் செய்துள்ள அதேசமயம் கங்கூலி இறுதிப்போட்டியில் பொறுப்புணர்ந்து செயற்பட்டுள்ளார். ஆனால் இந்திய அணியின் துடுப்பாட்டப் பலம் ஒட்டு மொத்தத்தில் சரிந்து வருவதை எவரும் மறுத்துவிட முடியாது.

இப்போட்டிகளில் காயம் காரணமாக சச்சின் விளையாடாமையும் இந்திய அணிக்கு இழப்பு என்பதும் யதார்த்தமே.

இதேசமயம் இந்திய அணியின் பந்துவீச்சாளர்களும் துடுப்பாட்ட வீரர்களின் பலவீனங்களை அறிந்து, பந்து வீசுவதற்கு இன்னும் கற்றுக்கொள்ளவில்லை என்றே கூறவேண்டும். பதான் அற்புதமாகப் பந்து வீசினாலும் நெருக்கடியான நிலைகளிலே சுதாகரித்துக்கொண்டு பந்து வீசுவதற்கு கற்கவேண்டிய விடயங்கள் நிறைய உண்டு.

நடந்தவை நடந்து முடிந்துவிட்டவையாக அமைய, இந்திய அணி தனது நிலையை உணர்ந்து மினி உலகக் கிண்ணப் போட்டியில் செயற்படாதுவிடின் இந்திய அணி வீரர்களது வீடுகளுக்கு மீண்டும் கறுப்புமை பூசப்படும் என்பது திண்ணம்.

\- லெஸ்லி.


## ஜொனெக்ஸ் விளையாட்டுப் புதிர்

01. ஒலிம்பிக் போட்டிகளில் அதிகூடியபதக்கங்கள் பெற்ற நாடு எது?
02. ICC சின்னப் போட்டிகள் எந்த நாட்டில் நடைபெற்று வருகின்றன?
03. 2008 இல் ஒலிம்பிக் போட்டிகள் எங்கு நடைபெறப் போகின்றன?

**விளையாட்டுப் புதிர் 20**

விண்ணப்பப்படிவம்

முழுப்பெயர்:.........................................

முகவரி:.............................................

01.

02.

03.

விடைகள் எழுதப்பட்ட இவ்விண்ணப்பப்படிவத்தைப் பின்வரும் முகவரிக்கு 21.09.2004 முன்னதாக அனுப்புங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

விளையாட்டுப் புதிர்-இல.20
நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**விளையாட்டுப்புதிர் - 19**
**வெற்றியாளர்**
இ.குமரேஸ்வரன்
'சேதுபதி' துன்னாலை மத்தி.

அனுசரணை:
ஜொனெக்ஸ் மல்ரி பலஸ் விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.
**YONEX MULTI PALACE**
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# இப்படியும் ஒரு சோதனை


காஸ்பரோவிச் நீ இல்லாமல் இல்லை

காயமடைந்து நீண்ட காலம் அணிக்குள் மக்ரா போது அவுஸ்ரேலிய அணிக்குக் குறிப்பாக ரிக்கிப் பொண்டிக்கிக்கு பிரச்சினை குறைவாக இப்போது இவரால் பிரச்சினை. வேறொன்றுமல்ல, படையணியின் முதல்வனாக, இயல்பாக அணிக்குள் யாரைத் தட்டுவது. பிரட்லீ காயப்பட்டிருந்த அணிக்குள் உள்வாங் கப்பட்டிருந்தார். இப்பொழுது கிண்ணப் போட்டிகள் துவங்கி விட்ட நிலையில் போட்டியில் இருவருமே விளையாடினர். காஸ்ப கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களைச் சாய்த்து லீ 67 ஓட்டங்கள் கொடுத்து ஒரேஒரு

இதுதான் கேள்வி. ஐ.சி.சி கிண்ணத்துக்கான இருவரும் வேகப்பந்து வீச்சாளர்களாகவும் , களமிறங்க அடுத்த வேகப்பந்து வீச்சாளர் ரோவிச்சா இப்பொழுதுள்ள பிரச்சினை இது

ரிக்கிப் பொண்டிங் சஞ்சலத்துக்குள்ளாகி படாமலுமே இவர் பேசுகிறார். அவுஸ்ரேலியா ஆட்டத்தில் ஐக்கிய அமெரிக்காவைச் சந் செய்து கொண்டு இருக்கிறார்கள். இறுதி வெளிவரக் கூடியவாறான அணியை அவர். பொறுத்திருந்து பார்ப்போம்.

வராமல் இருந்த அணித்தலைவர் இருந்தது. ஆனால் இவர் பந்து வீச்சுப் வரும் போது பின்வரிசையில் காலத்தில் காஸ்பரோவிச் பிரட்லீ வந்துவிட்டார். ஐ.சி.சி பாகிஸ்தானுக்கு எதிரான ரோவிச் 47 ஓட்டங்களை மட்டும் வெற்றிக்கு வழிவகுத்தார். ஆனால் விக்கெட்டை மட்டுமே பெற்றார்.

போட்டிகளில் மக்ரா, ஜிலெஸ்பி பிரட்ஹொக் சுழற்பந்து வீச்சாளராகவும் யார்? பிரட்லீயா அல்லது காஸ்ப தான்.

இருப்பதாகத் தெரிகின்றது. பட்டும் ஐ.சி.சி கிண்ணத்துக்கான முதல் திக்கிறது. ஒவ்வொரு வரும் நன்றாகவே நேரத்தில் எமது முழுப் பலமும் போட்டியில் ஈடுபடுத்துவோம் என்கிறார்

\- மரியா

# தொடர்ந்தும் ஆசிரியர் பற்றாக்குறை நீடித்தால் மாணவரின் கல்வி சீரழியும் நிலை ஏற்படும்

## கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் தெரிவிப்பு

ஆசிரியர்கள் வாண்மையை வளர்த்துக்கொள்வதில் ஒரு நெருக்கடியை எதிர்நோக்குகின்ற ஒரு நிலை இருந்து வருவதை நாம் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

ஏனெனில், பல்வேறு பாடத்துறைகளிலும் பல்வேறு வகையான ஆசிரியப் பற்றாக்குறைகள் இருந்தாலும் கூட, மாணவர்கள் கல்வியைத் தொடர்வதில் பல்வேறு நெருக்கடிகளை எதிர் நோக்கவேண்டியுள்ளது என, கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆசிரியர் வாண்மை விருத்தி செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் - இந்தப் பிரதேசங்களில் ஆசிரிய வாண்மை விருத்தி நாளாக அறிவித்து, நிகழ்வுகளை நடத்துவது என்பது சாலப்பொருத்தம்.

ஏனென்றால் இந்தப் பகுதியின் தேவைகள், ஆசிரியர் பற்றாக்குறையினால் நலிவடைந்து போயிருக்கின்றது.

இந்த நிலையிலே இந்தப் பணி நிச்சயம் தேவையானது. இந்தப் பிரதேசத்தில் மட்டுமன்றி, வட-கிழக்கு மாகாணங்களில் ஆசிரியர் பற்றாக்குறையினால் நலிவடைந்து இருக்கிறது.

வன்னிப்பகுதி கூடுதலான ஆசிரியப் பற்றாக்குறையோடு இருந்தாலும்கூட, எமது வட-கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை ஆசிரியப் பற்றாக்குறை ஒரு பொதுவான சிக்கலாகும்.

ஆசிரியர் பற்றாக்குறை என்பதைவிட, ஆசிரியர் இல்லை என்றே கூறலாம். 12 ஆங்கில ஆசிரியர்களை வைத்துக்கொண்டு, 95 பாடசாலைகளிலே கற்பித்தலை நடத்த வேண்டிய நிலை கிளிநொச்சியில் நிலவுகின்றது.

இதுபோன்று வட-கிழக்கு மாகாணத்திலே ஆங்கில, தமிழ்ப் பிரிவுகளுக்கான ஆசிரியப் பற்றாக்குறை நிலவுகின்றது.

இதனால், ஆங்கிலக் கல்வி முற்றாக அற்றுப்போகக்கூடிய நிலை காணப்படுகின்றது. மிக நீண்டகாலமான அதாவது - 25,30, ஆண்டு கால புள்ளி விபரங்களை எடுத்துப் பார்த்தால், தொடக்கக் கல்வியைக் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் பற்றாக்குறை என்பது வட-கிழக்கு மாகாணம் முழுவதும் சவாலாக இருந்தாலும்கூட, வன்னிப்பகுதியைப் பொறுத்தவரையில் 50 வீதமான ஆசிரியப் பற்றாக்குறை தொடக்க நிலைக் கல்வி நிலையில் இருந்து வருகின்றது.

எமது மாணவர்களை வழிநடத்தி, கற்பித்தலை மேற்கொள்வது மிகப் பெரிய சவாலாக இருக்கின்றது.

மிக நீண்டகாலமாக எமது பகுதிகளில் தொடக்க கல்வி ஆசிரியர் பற்றாக்குறை நிலவிவருவதன் காரணமாக மாணவர்களின் கல்வி அறிவு மிகக்குறைந்த நிலையிலே சென்றுகொண்டிருக்கின்றது.

தொடக்க கல்வி மாணவர் கல்விக்கான அடித்தளம் ஆட்டம் காணுகின்ற அளவுக்கு கடந்த 10, 15 ஆண்டுகளுக்கு மேலாக எமது தொடக்கக்கல்வி ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுகின்றது.

இந்த நிலையில்தான், எமது கல்விச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. மாணவர்களுக்கு இருக்கின்ற அடித்தளமே ஆட்டம் காண்கின்ற நிலையில்தான் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் கல்விச் செயற்பாடுகள் இருக்கின்றது.

தமிழ்ப் பிரிவில் கூடுதலாக இந்தத் தன்மை காணப்படுகின்றது. 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ்ப் பிரிவு மிக உயர்ந்த நிலையில் இருந்தது. ஆனால், இன்று அந்த நிலை மாறியுள்ளது.

ஆசிரியர் பற்றாக்குறையினால் எமது கல்வி கீழ் நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது.

பல்கலைக்கழகத்துக்குச் செல்கின்ற மாணவர்களின் அனுமதி தொடர்பான புள்ளி விபரங்களைப் பார்க்கின்றபோது, திறமை அடிப்படையில் பல்கலைக்கழகத்துக்குச் செல்கின்றவர்களைக் கணக்கிட்டுப் பார்த்தால், கடந்த 10 ஆண்டுகளாக ஒவ்வொரு பாடத்துறையிலும், பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.

சில பாடங்களைப் பொறுத்தவரை, திறமை அடிப்படையில் உள்நுழைய முடியாதநிலை காணப்படுகின்றது. இந்த நிலையையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

எதிர்காலத்திலே தேசியக் கல்வி ஆணைக்குழுவின் ஆலோசனைக்கமைவாக அடுத்தடுத்த ஆண்டுகளிலேயே திறமை அடிப்படையில் பல்கலைக்கழகத்துக்கான அனுமதி இருபது இருபது வீதமாகக் கூட்டப்பட்டு, அடுத்த 2 அல்லது 3 ஆண்டுகளில் மாவட்ட, கோட்ட ஒதுக்கீடுகள் நிறுத்தப்பட்டு, திறமை அடிப்படையில் மட்டுமே மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டிய ஒரு நிலை உருவாகவுள்ளது.

அந்த நிலையிலே இதேபோன்ற எமது கல்வி அளவை வைத்துக்கொண்டு வட-கிழக்கு மாகாணத்தில் இருந்து ஒருவரும் பல்கலைக்கழகம் செல்லமுடியாத நிலை பலதுறைகளுக்கு ஏற்படலாம்.

இதில் நாங்கள் மிகவும் விழிப்பாக இருந்து செயற்படவேண்டியதொரு காலகட்டத்திலே இருக்கிறோம்.

1995 ஆம் ஆண்டில் இருந்து எடுத்த பட்டியலில், திறமை அடிப்படையிலே பல்கலைக்கழகத்துக்குச் செல்கின்றவர்களின் வீதம் குறைந்து கொண்டிருக்கின்றது.

2001, 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மருத்துவத்துறை க்கு 4 வீதத்தினர்தான் திறமை அடிப்படையில் தமிழ்மொழிமூல மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றுள்ளனர்.

ஆசிரியர் பற்றாக்குறைநிலை நீடித்துக் கொண்டு செல்லுமானால், எமது கல்வி சீரழிந்துவிடும். இதனை நாம் கவனத்தில் கொண்டு, ஈடுசெய்வதற்கான நடவடிக்கைகளை உரிய வகையில் எடுக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.






உலக தரிசனம் வேல்ட் விசன் நிறுவனத்தின் நிதியுதவியுடன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் கிளிநொச்சி முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கற்றல் உபகரணத் தொகுதியை வழங்குவதையும் இந்த நிகழ்வில் கலந்துகொண்ட முன்பள்ளி ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

## அத்துமீறிய இழுவை படகுகளால் மீன்பிடி வலைகள் சேதம்

கிளிநொச்சி - பூநகரி பள்ளிக்குடா கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகரித்து வருவதாக, பள்ளிக்குடா மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக அத்துமீறி நுழைந்த இந்திய இழுவைப் படகுகள் - பள்ளிக்குடா மீனவர்களின் மீன்பிடி வலைகளைச் சேதப்படுத்தியுள்ளன.

இவ்வாறு அத்துமீறி நுழைந்த மூன்று இந்திய இழுவைப்படகுகளைப் பள்ளிக்குடா மீனவர்கள் கடந்த வியாழக்கிழமை இரவு கைப்பற்றியதாகவும், இதனைக் கடற்தொழிலாளர் சமாசத்திடம் கையளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




### மீளக் குடியமர்ந்த மக்களுக்கு புனர்வாழ்வு நடவடிக்கை

முல்லை மாவட்ட மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கரும்புள்ளியான் கிராமம், விநாயகபுரம் கிராமங்களில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு - மலசல கூடங்கள், குடிநீர்க் கிணறுகள், விவசாய உதவிகள் என்பனவற்றை புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் கெயார் மற்றும் நிகொட் நிறுவனத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

### மாதாந்த வீரமுரசு நிகழ்வு

மாங்குளம் பிரதேச, தேசிய எழுச்சிப்பேரவையின் ஏற்பாட்டில் வீரமுரசு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் ஆனந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை பொறுப்பாளர் மயூரன், முல்லை மாவட்ட அரசயற்துறைப் பொறுப்பாளர் சே.முகுந்தன் தென்னிந்திய திருச்சபையின் மாங்குளப் பிரதேச குரு முதல்வர் உட்படப் பலர் கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்கினர்.

## நெடுங்கேணி ~ வண்ணாங்குளம் நியாப் திட்டத்தின்கீழ் புனரமைப்பு

வவுனியா - நெடுங்கேணி, பெரியமடுப் பகுதியிலுள்ள வண்ணாங்குளம் நியாப் திட்டத்தின்கீழ் உள்வாங்கப்பட்டு, சீர்செய்யப்பட்டு வருகிறது.

14,50,000 ரூபா செலவில் இந்தக் குளம் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. இதனால், ஜெயசிக்குறு படை நடவடிக்கை மூலம் இடம் பெயர்ந்து மீளக்குடியேறிய 45 குடும்பங்கள் பயனடையவுள்ளன.

நெடுங்கேணி பெரியமடு கிராமத்தில் 4,50,000 ரூபா செலவில் பொதுநோக்கு மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை புளியங்குளம் மதியாமடுவிலுள்ள வீதிகள் - புனரமைப்புக்கென கடந்த மூன்று மாதங்களாகக் கிரவல் மண் பறிக்கப்பட்டுள்ள போதிலும், அவை வீதி புனரமைப்பதற்குப் பயன்படுத்தப்படாமல், வீதியெங்கும் பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இனிவரும் பருவமழை காலத்துக்கு முன்னர், இந்த வீதியைப் புனரமைப்புச் செய்ய சம்பந்தப்பட்டவர்கள், உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென இந்தப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

## வன்னிப்பகுதி மின்விநியோகத்துக்கு போதியளவு நிதியுதவி இல்லை!

### இலங்கை மின்சாரசபை தெரிவிப்பு

(கிளிநொச்சி)

நிதியின்மை காரணமாக வன்னிப் பகுதியில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பூரணமான மின் விநியோகத்தை வழங்கமுடியாத நிலை தோன்றியுள்ளதாக இலங்கை மின்சாரசபையினர் தெரிவித்துள்ளனர்.

வன்னிப் பகுதியில் போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களில், மின் விநியோக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இலங்கை மின்சாரசபை - தற்போது அங்குள்ள சில பிரதேசங்களில் வாழும் மக்களுக்கான மின்சார தேவையை ஓரளவு பூர்த்தி செய்து வருகின்றது.

இதில் மேற்குறித்த மாவட்டங்களின் ஒரு பிரதேசத்தில், ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகையினருக்குக் குறைந்தளவுநேர மின்சாரத்தையே தற்போது இந்தச்சபை வழங்கி வருகின்றது.

தற்போது பெருமளவில் பூரணமான மின் விநியோகத்தை வழங்குவதற்கான திட்டமொன்று முன்வைக்கப்பட்டு, அதற்கான ஆரம்பகட்ட வேலைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இருப்பினும், இதற்கான நிதியுதவியை வழங்குவதாக இருந்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியானது, இன்னமும கிடைக்கப்பெறாததால் இந்த விநியோகத் திட்டம் கேள்விக்குறியாகவே இருந்துவந்தது.

தற்போது இந்த நிதியைப் பெறுவதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதன் பலனாக நிதி கிடைக்குமானால் - கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பூரணமாக இருபத்திநான்கு மணித்தியால மின்சார விநியோகத்தை மேற்கொள்ளக் கூடியதாகவிருக்கும் என இலங்கை மின்சாரசபையினர் தெரிவித்தனர்.

## சிறுபோக பயிர்ச்செய்கை காலத்தில் பன்றி நெல்லின் பரம்பல் அதிகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வயல் நெல்களிலும், விநியோக வாய்க்கால் கரையோரங்களிலும் - சிறுபோகப் பயிர்செய்கை காலத்தில் பன்றிநெல் இருப்பது அவதானிக்கப்படுகிறது.

குறிப்பாக முரசுமோட்டை புலித்தேவன் முறிப்பு, சேற்றுக்கண்டி, மகிழ்காடு, குஞ்சுப்பரந்தன் ஆகிய இடங்களில் இவை அதிகமாகக் காணப்படுகிறன.

இந்த பன்றி நெல்லினால் நெல்லின் தரம் மிகவும் குறைவடைவதுடன், கபில நிறத்தினர்களுக்கு விருந்து வழங்கியாக இருக்கும். இது மாவட்டத்தில் பரவினால், விவசாயிகளுக்கும், சூழலுக்கும் பேராபத்தை விளைவிக்கும்.

இதனை மேலும் பரவவிடாது அழிக்குமாறு அப்பகுதி திட்டக் குழுக்களையும், விவசாய அமைப்புக்களையும் சம்மந்தப்பட்ட விவசாயிகளையும் கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார்.

## கிளிநொச்சி - பூநகரி வீதிகள் போக்குவரத்து செய்யமுடியாத நிலையில்

கிளிநொச்சி - பூநகரி பகுதியில் உள்ள கிளை வீதிகள் பல போக்குவரத்து மேற்கொள்ள முடியாத அளவுக்கு மிக மோசமாக பாதிப்படைந்துள்ளன.

இந்த வீதியில் அமைந்துள்ள வெட்டியாகுறிஞ்சி, கம்பனி வைரவர் கோயில் சந்தி ஆகிய வீதிகளே சேதமடைந்துள்ளன.

அத்துடன், திகிரி விநாயகர் கோயிலுக்கு அருகிலுள்ள மதகு உடைந்து, நிலத்தில் அமிழ்ந்துள்ளது.

அது மட்டுமன்றி கடுக்காய் தீவு, ஞானிமடம் வீதியில் இரு இடங்களில் உள்ள மதகுகளும் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது முற்றாகச் சேதமடைந்துள்ளன.

இதுவரையில் இந்த மதகுகள் திருத்தப்படாதிருப்பதுடன் - மருதங்குள வாய்க்காலும், பண்டார வாய்காலுக்கும் மதகு அமைக்கப்படவேண்டும் என அங்குள்ள மக்கள் கோரியுள்ளனர். மாரிகால மழையால் மண் வீதிக்கு வருவதால், வீதிகள் செப்பனிடப்பட்டு, சேதமடைந்த மதகுகளைச் சீர்படுத்தி உதவ, சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே*
*செல்வத்தைத் தேக்கும் படை.*

திருக்குறள்

# நமது நோக்கு

## அவலநிலை தீருமா ?

இந்தியாவிலுள்ள அகதி முகாம்களில் கடந்த பல வருடங்களாகக் காலத்தை ஓட்டிவிட்டு - தாயகம் நோக்கித் திரும்பிவரும் ஈழத்தமிழ் அகதிகள் மரணத்தின் வாசலுக்குத்தான் சென்று திரும்புகின்றனர்.

இலங்கையில் போர் ஆரம்பித்த பின்னர் - அகதிகளாகப் படகுகள் மூலம் இந்தியாவுக்குத் தப்பிச் சென்ற போதும், மீளத்திரும்பும் போதும் - நூற்றுக் கணக்கானவர்களை கடல் தின்று தீர்த்துவிட்டது.

சண்டை ஓய்ந்து சமாதானம் நிலவுகின்ற சூழலிலும், அகதிகளின் மீள்வருகையும், கடலில் அவர்களுக்கு நேரிடும் அவலங்களும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

பத்து வருடங்களுக்கும் மேலாக தமிழக அகதிமுகாம்களில் அவலவாழ்வு நடத்திவிட்டு, எப்படியாவது சொந்த இடம் போய்ச்சேர்ந்தால் போதும் என்று திரும்பும் அகதிகள் - தாயக மண்ணில் கால்பதிக்கும் வரை துரதிஷ்டங்கள் அவர்களைத் துரத்தவே செய்கின்றன.

இந்திய அதிகாரிகளுக்குத் தெரியாமல் இவர்களை ஏற்றியிறக்கும் படகுகள், அவர்களுக்கு ஆட்களைத் திரட்டிக் கொடுக்கும் தரகர்கள், பிடிபட்டு விட்டால் 'சமாளிப்பதற்கு' பணம் கோரும் பொலிஸார் என்று, தாம் சிறு துளியாய் சேகரித்த பணத்தையெல்லாம் தொலைத்துவிட்டுத்தான் படகேறுகின்றனர்.

ஆயினும், கடலில் கொந்தளிப்பு, அகதிகளை ஏற்றிவரும் படகுச் சொந்தக்காரர்களின் ஏமாற்றுத் தனங்களால் - உயிர்களைக் கூட இழக்க வேண்டிய ளவுக்குத் துன்பங்களை இவர்கள் சுமக்கின்றனர்.

அண்மையில் கூட இந்திய மீன்பிடிப் படகு ஒன்றின் மூலம் நாடு திரும்பிய 28 அகதிகள் கச்சதீவில் இறக்கிவிடப்பட்டு, ஐந்து நாட்களாக அநாதரவான நிலையில் தவிக்க நேரிட்டது.

எப்படியோ மூவர் தப்பிவந்து உரிய வேளையில் தகவல் கூறியதால் - பசி, மயக்க நிலையுடன் எஞ்சியிருந்தோர் காப்பாற்றப்பட்டனர்.

இப்படித் தமிழகத்திலிருந்து அகதிகள் பாதுகாப்பற்ற கடற்பயணங்களை மேற்கொள்வது தொடர்ந்துகொண்டேயிருக்கிறது. ஆனால், இந்திய அரசாங்கமோ, இலங்கை அரசாங்கமோ அல்லது சர்வதேச தொண்டர் நிறுவனங்களோ இதையிட்டு அதிக கரிசனை காட்டவில்லை.

விடுதலைப்புலிகள் - தமிழகத்திலிருந்து நாடு திரும்பும் அகதிகளுக்குப் பாதுகாப்பான போக்குவரத்து வசதிகள் செய்துகொடுக்கப்பட வேண்டும் என ஐ.நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரகத்திடம் பலமுறை வலியுறுத்தியும் - இன்னமும் உரிய நடவடிக் கைகள் எடுக்கப்படவில்லை.

பெருமளவிலான அகதிகள் தமது சொந்த இடத்துக்குத் திரும்பிவரும் ஆவலில் உள்ளனர் என்பதை இந்திய அரசாங்கமும், யு.என்.எச்.சி.ஆரும் மேற்கொண்ட ஆய்விலிருந்து தெரியவந்த போதும் - அதற்குரிய வாய்ப்புக்களை வழங்காததன் விளைவாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

சண்டைக்காலத்தில் ஆபத்துக்களையெல்லாம் துச்சமென எண்ணி உயிர்தப்பினால் மட்டும்போதும் என்று தப்பி ஓடியவர்கள், சமாதான காலத்தில் உயிரைக் கொடுத்தாவது நாடுதிரும்ப எத்தனிக்கிறார்கள் என்றால் - அதற்கு இந்திய - இலங்கை அரசாங்கமும் யு.என்.எச்.சி.ஆரும் உரியவாறு செயற்படவில்லை என்றுதானே அர்த்தம்.

ஐ.நா அமைப்பு - அகதிகளுக்கென்றே உருவாக்கிய யு.என்.எச்.சி.ஆர் அமைப்பினூடாக அகதிகளை நாடுதிருப்பி அழைக்கும் நடவடிக்கைகளை உடனடியாகத் துரிதப்படுத்த வேண்டும்.

நாடு திரும்ப விரும்பும் அகதிகளை பதிவுசெய்து - விமானம் மூலம் கொஞ்சக் கொஞ்சப்பேராக தாயகம் நோக்கி அழைத்துவரும் யு.என்.எச்.சி.ஆரின் செயற்பாடு யதார்த்தபூர்வமற்றது.

இந்த நடைமுறை மூலம் பல்லாயிரம் அகதிகளைத் திரும்பிக் கொண்டு வந்து சேர்க்கப் பல்லாண்டு காலம் செல்லலாம். கடல் வழியாக - கப்பல் மூலம் அகதிகளை பெருமளவில் அழைத்து வர உடனடி நடவடிக்கை எடுக்கப்படுவது இன்றைய நிலையில் மிக மிக அவசியமாகும்.

அதன் மூலமே சமாதான காலத்திலும் எமது மக்கள் கடலரக்கனால் காவு கொள்ளப்படும் நிலையை தவிர்க்க முடியும். இத்தகைய நடவடிக்கைகளுக்கு இந்திய - இலங்கை அரசுகளும், யு.என்.எச்.சி.ஆரும் எடுக்கப் போகின்ற நடவடிக்கைகள் தான் - எதிர்காலத்தில் கச்சதீவு போன்ற சம்பவங்கள் நிகழாதென்பதை உறுதி செய்யும்.

## நாடும் நடப்பும்




## மன்னார் கடற்பரப்பில் எரிந்த

# படகுகளிலிருந்த 8 மீனவரையும் காணவில்லையென முறைப்பாடு

(சென்னை)

மன்னார் - பேசாலைக் கடற்பரப்பில் தீயில் எரிந்த இரண்டு மீன்பிடிப்படகுகளிலும் பயணித்ததாக நம்பப்படும் எட்டு இந்திய மீனவர்களும் காணாமற்போயுள்ளதாக இந்தி யச்செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் படகுகள் எனக் கருதி இலங்கைக் கடற்படையினர் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில், இந்தப் படகுகளில் பயணித்த எட்டு இந்திய மீனவர்களும் இறந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

இந்த மீன்பிடிப் படகுகள் கடல் எல்லைக்குள் நடமாடியதை அவதானித்த கடற்படையினர், தங்களது அவதானிப்பை முடுக்கிவிட்டதுடன், மேலதிக உதவியையும் கோரியுள்ளனர். இதையடுத்து, இந்த இரு படகுகளையும் சுற்றிவளைக்க முற்பட்ட கடற்படையினர், அப்படகுகள் இந்திய கடல் எல்லையை நோக்கி வேகமாகப் பயணிக்க முற்பட்டபோது வேகமாக கலைத்துச் சென்றதுடன், தமது எல்லையைக் கடக்கமுன்னர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற தேவையேற்பட்டதால், சரமாரியாக அப்படகுகளை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையினர் இவ்வாறு கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அப்படகுகளில் பயணித்த எட்டு இந்திய கடற்தொழிலாளர்களும் இறந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. இப்பயணிகளைத் தேடும் நடவடிக்கைகளை இலங்கை - இந்திய கடற்படை சிறப்புப் அணியினர் மேற்கொண்டுள்ளனர்.

# பழங்கால ஈமச்சின்னங்கள் வேலணை சாட்டிப்பகுதியில் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

வேலணை சாட்டிப்பகுதியில் இரண்டாயிரம் வருடங்கள் பழமை வாய்ந்த தொல்பொருட்கள், சின்னங்கள் பலவற்றை யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறையினர் கண்டுபிடித்துள்ளனர்.

வேலணை சாட்டிப் பகுதியில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்திற்கு வடதிசையில் உள்ள ஒரு இடத்தில் இந்த பழமையான பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறையைச் சேர்ந்த கலாநிதி ப.புஸ்பரட்ணம் இதனை வெளிப்படுத்தியிருந்தார். நேற்று முன்தினம் அங்கு சென்ற யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் க.சத்தியசீலன் மற்றும் கலாநிதி ப.புஸ்பரட்ணம், வரலாற்றுத்துறையைச் சேர்ந்த வரலாறு மற்றும் தொல்லியல் கற்கும் மாணவர்கள் அங்கு ஆய்வை நடத்தினர். அந்த ஆய்வின்மூலம் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த ஈமத்தாழியொன்றும், சில கல் வகைகளும், பாவனைப்பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

இந்த ஈமத்தாழியானது தென்னிந்தியாவின் குடுமியான் மலைப் பகுதியில் தொல்லியலாளர்கள் மேற்கொண்ட ஆய்வின்மூலம் வெளிப்படுத்திய தொல்பொருட்களுடன் ஒப்பிடக் கூடியதாக உள்ளது. எந்தவித ஐயமும் இன்றி சகல சான்றுகளுடனும் இதன் தொன்மையை விளங்கிக்கொள்ளமுடிவதாக கலாநிதி ப.புஸ்பரட்ணம் தெரிவித்தார்.

இந்த ஆய்விற்கான நிதியை யாழ் மாவட்ட அரச அதிபர் செபத்மநாதன உறுதியளித்திருப்பதால், அங்கு தொடர்ந்தும் ஆய்வுகள் நடத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# பேருந்து பழுதடைந்துள்ளமையால் போக்குவரத்து சேவை ஸ்தம்பிதம்!

நெடுந்தீவுப் பிரதேச உள்ளூர் போக்குவரத்தில் ஈடுபட்டு வந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து கடந்த 8 ஆம் திகதி மாலைநேரச் சேவையுடன் பழுதடைந்து நெடுந்தீவு மேற்குப் பகுதியில் நிறுத்திவைக்கப் பட்டுள்ளது.

இதேவேளை கடந்த மாத இறுதிப்பகுதியில் திருத்த வேலை காரணமாக சுமார் 5 தினங்கள் சேவையில் ஈடுபடாதிருந்த பின்னர், பொறியியல் பகுதியினர் யாழ்.நகரில் இருந்து சென்று திருத்தங்களை மேற்கொண்ட பின்பே சேவையில் ஈடுபட்ட இந்தப்பேருந்து பின்னர் தற்பொழுது மீண்டும் பழுதடைந்துள்ளது.

நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கான பிரதான வீதி மிகமோசமான நிலையில் சேதமடைந்து இருப்பது பேருந்து அடிக்கடி பழுதடையக் காரணம் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

பஸ்சேவை இடம்பெறாமையால் நெடுந்தீவு மேற்கிலிருந்து வெளியிடங்களுக்கான பயணங்களை மேற்கொள்வதிலும், வைத்தியசாலை மற்றும அரச அலுவலகங்களுக்கு வந்து செல்வதிலும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வது குறிப்பிடத்தக்கதாகும். (113)

# மாகாணசபைகளுக்குரிய அதிகாரங்கள் உரியமுறையில் பகிரப்படவேண்டும்

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

13 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் உரிய முறையில் பகிரப்பட வேண்டும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று சிலாபம் கொச்சிக்கடையில் நடைபெற்ற மாகாண சபைகளின் முதலமைச்சர்களின் மாநாட்டில் பங்கேற்ற அவர் வடக்கு - கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வாகவே இந்த மாகாண சபைமுறை 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

எனினும் அதனை உரிய முறையில் செயற்படுத்தாமை காரணமாக வடக்கு - கிழக்கில் அந்தமுறை செயலிழந்தது. எனினும் ஏனைய பகுதிகளில் மாகாணசபை முறை தற்போது செயற்பட்டுவருகின்றது.

இந்த நிலையில் அந்த மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். அதன் மூலமாகத்தான் நிர்வாக முரண்பாட்டைத் தீர்க்கமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தெய்வீக இசையரங்கு!

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவகாலத்தை முன்னிட்டு, நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால், தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன், நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று மாலை 6.30 மணியிலிருந்து 7.30 மணிவரை தெய்வீக இசையரங்கின் 23 ஆவது நாள் நிகழ்வு இடம்பெறும்.

இந்த நிகழ்வில் - வி.சிவஞானசேகரம் - பாட்டு, சைந்தவி இராதாகிருஷ்ணன் - வயலின், எஸ். துரைராஜா மிருதங்கம், கே.அனந்தகோபன் கெஞ்சிரா, எம்.கஜன் - முகர்சிங் ஆகியோருடன் பாட்டுக் கச்சேரி நடைபெறும். (100)

வாரநோக்கு

யாழவன்

# இரு சிறுபான்மை இனங்களுக்கிடையே அரசியற் தலைவர்கள் ஏற்படுத்திய சலசலப்பு









கடந்த வாரம் சிறுபான்மை இன அரசியலிலே சில முக்கிய திருப்பங்களை ஏற்படுத்திய வாரமாக நகர்ந்து சென்றுள்ளது. மொழியால் ஒன்றுபட்டு இருந்தாலும் - மதத்தாலும், இனத்தாலும் வேறுபட்டு நிற்கும் இரு சிறுபான்மை இனங்களுடைய அரசியற்தலைமைகள் ஏற்படுத்திய சலசலபபு தான் கடந்த வாரம் முழுவதும் அரசியல் அரங்கிலே பேச்சாக இருந்தது.

அதாவது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சரியும் நிலையிலுள்ள, தற்போதைய அரசுக்கு முண்டு கொடுக்க முன்வந்தமையும், முஸ்லீம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்த 'உம்மா' கட்சி என புதிய கட்சி தோற்றம் பெற்றமையும், பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

அதேபோன்று நாடாளுமன்றத்திலே தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆற்றிய சில உரைகளும், தறபோதைய சமாதான நகர்வுகளின் உண்மைத் தன்மையையும், புதிய அரசினதும் அதனோடு இணைந்த சில அடிவருடிகளினதும் முகமூடியை கிழித்தெறிந்துள்ளது.

இன்று கவிழுமோ? அல்லது நாளை கவிழுமோ? என எதிர்பார்த்திருந்த அரசை தனது நாடாளுமனற உறுப்பினர்களை வைத்துக் காப்பாற்ற முனைகிறார் ஆறுமுகம் தொண்டமான. அதுமட்டுமன்றி தனது 'பல்டிக்கு' காரணமாக ஒட்டு மொத்த தமிழினத்தினதும் நன்மை கருதியே தான் இதைச் செய்துள்ளதாகவும் கதை வேறு அளக்கின்றார். தான் பிரதிநித்துவப்படுத்தும் - தன்னை இந்த நிலைக்கு உயர்த்திவிட்ட மலையக மக்களுக்கே நன்மை செயய முடியாத ஆறுமுகன், ஒட்டு மொத்த தமிழினத்துக்கும் நன்மை செய்வதாகக் கூறுவது வேடிக்கையாகவுள்ளது. இது 'கூரையேறி கோழி பிடிக்கத் தெரியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போனகதையாகவுள்ளது.'

சரி அவ்வாறே ஆறுமுகன தொண்டமான் சொல்வது போல, தற்போதைய அரசு பெரும்பான்மை பலம் இல்லாத காரணத்தினால், சமாதான முயற்சிகளை நகர்த்துவதற்கு இழுபறிப்படவேண்டிய நிலையிலுள்ளது. எனவே இந்த இழுபறி நிலையை போக்குவதற்காகவே தான் அரசுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளதாகக் கருதினால், எதற்காக அமைச்சர் பதவியை ஆறுமுகன் தொண்டமானும் அவரது சகா முத்துசிவலிங்கமும் எதிர்பார்க்க வேண்டும்?

சமாதானம் மீதான விசுவாசமே கட்சி தாவலுக்கு காரணமெனின், முன்னர் ரணிலுக்கு தமிழ்தேசியக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் காட்டியது போல வெறும் ஆதரவை மட்டும் வெளியிலிருந்து வழங்கியிருக்கலாமல்லவா? ஏன் அமைச்சர் பதவிக்காக தவம் கிடக்கவேண்டும்? செய்த ஊழல் மோசடிகள் அம்பலமாவதைத் தவிர்ப்பதற்காக தன் நிலை மறந்து செயற்பட்டுள்ளார். ஆறுமுகன அவரை மலையக மக்கள் மன்னிப்பார்களாக!

தற்போதைய அரசோ சமாதானம் மீது சிறிதும் நம்பிக்கையற்று செயற்பட்டு வருகிறது. அத்தகையதொரு அரசுக்கு வெறும் பத்திலும் குறைந்த நாடாளுமன்றஉறுப்பினர்கள் முட்டு கொடுப்பதன் மூலம, திருப்பம் ஒன்றை ஏற்படுத்தி விட முடியுமா? ஏனெனில் தற்போதைய அரசிலே பிரதான அங்கம் வகிக்கும் ஜே.வி.பியானது ஏறக்குறைய நாற்பது ஆசனங்களைத் தன் வசம் வைத்துள்ளது. இந்த நாற்பதும் - சமாதானத்திற்கு எதிராகவும், இனவாத சிந்தனைகளோடுமே இருப்பவர்கள். இவர்களை மீறி சமாதானத்தைக் கொண்டுவர சந்திரிகாவால் முடியாது. இது அனைவரும் அறிந்த விடயம். எனவே ஒரு இழுபறிநிலை உரு வாகியுள்ளமையும் தெளிவான உண்மை. இந்த நாற்பதை தனது பத்தை கொடுத்து சமாளிக்க முயல்கிறாரா ஆறுமுகன் - அல்லது அவரது அற்ப சலுகைகளுக்காக தனது பத்தையும் விலை பேசுகிறாரா? இது தான் இன்று சிந்திக்க வேண்டிய விடயமாகவுள்ளது.

ஆரம்பத்திலிருந்தே ஆறுமுகன் தனது கட்சித்தாவுதல் தொடர்பாக நேரத்துக்கு நேரம் பல அறிக்கைகளை விடுத்த வண்ணமும், பேட்டிகளை அளித்த வண்ணமும் இருந்தார். எனவே இவரது தாவல் ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். எனினும் அவர் தனது தாவலுக்கு கூறிய காரணம் தான் பலரையும் திரும்பிப் பார்க்கவைத்தது. சிலரை கவலை கொள்ளவும் வைத்தது.

கந்தப்பொலவில் மலையக மக்கள் இனவாதிகளால் கொலை செய்யப்பட்ட போதும், மலையக மக்களுடைய வாக்குச் சீட்டுக்கள் பல மாகாணசபைத் தேர்தல் காலங்களின் போது, பறிக்கப்பட்ட போதும் எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தி தான் சார்ந்த மக்களின் பாதுகாப்புக்காகவும், உரிமைக்காகவும் குரல் கொடுக்க முன் வராத ஆறுமுகன் எவ்வாறு அனைத்து தமிழ் மக்களின் நன்மைக்காகவும் பாடுபடப் போகிறார் என்பது தான் எவருக்கும் விளங்கவில்லை.

கந்தப்பொல படுகொலைச் சம்பவத்தைக் கண்டித்து, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கறுப்புப்பட்டி அணிந்து, நாடாளுமன்றம் சென்ற போது, அதிலே கலந்து கொள்ளத் தவறிய ஆறுமுகன் எப்படி தமிழ் மக்களின் நன்மை கருதி செயற்படுவார் என்பதை நம்பமுடியும் என்பதே இன்று அனைவரது மனதிலும் எழுந்துள்ள வினாவாகும். உண்மை எதுவெனின் 'ஆறுமுகனுக்கு இன்னொரு முகம் உண்டு. அதுவே 'ஏறுமுகம்' என்பதே சரியாகும்.

தான் அமைச்சராக இருந்த போது, புரிந்த சில இசகுபிசகுகளைத் தற்போதைய அரசின் முக்கியஸ்தர்கள் சிலர் வெளியே புட்டுவைக்கப் போகிறார்கள். அதன் மூலம் நீதிமன்றத்துக்கு போகவேண்டி வரும் எணப் பயந்த ஆறுமுகன், பேசாமல் கூண்டோடு சரணாகதி அடைந்துவிட்டார். அவரது இலக்கு என்றுமே அமைச்சர் பதவியும், அதன் பின்னான சூறையாடல்களும் தான் என்பது இப்போது தெளிவாகத் தெரிந்துள்ளது. இதனை மலையக மக்களுக்குப் புரியவைக்க வேண்டியது தமிழர்களின் கடமையாகும்.

தற்போதைய அரசிலுள்ளவர்களே சமாதானம் தொடர்பாகவொரு தீர்க்கமான நிலைப்பாடு இல்லாதவர்களாகவுள்ளார்கள். ஜே.வி.பியோ இடைக்கால நிர்வாக சபையைக் காரணம் காட்டி மேடைகள் தோறும் சமாதானத்துக்கு எதிராகக் கோசங்களை எழுப்பி வருகிறது. சில சந்தர்ப்பங்களில் இந்தக் கோசங்கள் தமிழர்கள் தனி நாடு அமைப்பதற்கான வாய்ப்பையும் உண்டாக்கி கொடுக்கலாம்.

அரசோ - ஜே.விபியை இணைத்து வைத்துக் கொண்டு 'ஆசாரி விடை கொடுத்தாலும் பூசாரி இடம் கொடுக்காத' கதையாக திண்டாடிக் கொண்டிருக்கிறது. நாட்டின் பொருளாதாரமோ பன்மடங்கு வீழ்ச்சியைக் கண்டுவிட்டது. சமையல் வாயு தொடக்கம் அத்தியாவசியப் பொருட்கள் அனைத்துமே விலையேறி விட்டன. வேலை நிறுத்தப் போராட்டங்களும், தொடர்கதையாக தொடர்ந்த வண்ணமுள்ளன. தற்போது அனைத்துப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் தமது சம்பள முரண்பாட்டை நீக்கக் கோரி, தொடர் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர். இதனால் அனைத்துப் பல்கலைக் கழகங்களினதும் கற்றல் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஊழியர்களின் வேலை நிறுத்தம் தொடர்ந்தால், பல்கலை கழகங்களை வர்த்தமானி அறிவித்தலினூடு காலவரையறையின்றி மூட வேண்டிய நிலைக்கு அரசு தள்ளப்படும். இது மாணவர்கள் மத்தியிலே ஒரு கொந்தளிப்பை ஏற்படுத்தி, ஆட்சி கவிழ்வதற்கு காரணமாகவும் அமைந்துவிடலாம்.

இது மட்டுமன்றி வேலை வாய்பபுக்களின்போது, தகுந்த காரணங்களின்றி பட்டதாரிகள் பலர் புறக்கணிக்கப்பட்டமை நாளுக்கு நாள் நள்ளிரவுவோடு நள்ளிரவாக அதிகரிக்கும் பொருடகளின் விலையேற்றம் என்பனவும், ஆட்சி கவிழ காரணமாக அமைந்து விடலாம். இதனால் ஜனாதிபதி சிறிது அச்சமும் கலக்கமும் அடைந்துள்ளார் என்பதை அவரது கருத்துக்களின் மூலமாக அறிய முடிகிறது.

அண்மையில் தனது பிரத்தியேக நடவடிக்கைகளுக்காக ஜனாதிபதி சந்திரிகா லண்டன் சென்றிருந்தார். அவர லண்டன் செல்வதற்கு இருவாரங்களுக்கு முன்னர், புலிகளின் பகுதிக்கு படைகளை அனுப்பப் போவதாகத் தெரிவித்தார். ஆனால், தற்போது லண்டனால் திரும்பி வந்தகையோடு இனிச்சண்டை வரவே வராது. சமாதானம் தான் வரும் என அறிக்கை விட்டுள்ளார்.

இந்த அறிக்கையானது தன்னையும், தனது ஆட்சியையும் மக்கள் கவிழ்த்து விடாமலிருப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக விடப்பட்டதேயாகும். பொருட்களின் விலையேற்றம் மூலம் கசையடி கொடுத்து விட்டுப் பின்னர் சண்டை இனிவராது எனும் தனது கருதது மூலமாக ஒத்தடம் கொடுக்க முனைகிறார் ஜனாதிபதி.

ஆனால் அவரது கருத்து பொய்த்துவிடுமோ என்னும் விதத்தில் மட்டக்களப்பு பகுதியிலே புலிகளின் நிலைகள் மீது இனம் தெரியாதோர் எனக்கூறப்படும் இராணுவச் சீருடை தரித்தோர் தாக்குதலைத் தொடுத்துள்ளனர். இது போரை ஆரம்பிக்கத் துடிக்கும் அரசின் மனதை அறிவதற்கான அறிகுறியாகும். ஆனால், அரசின் சோதனை முயற்சியானது சோக முயற்சியாகவே முடிந்துள்ளது.

ஏனெனில் யுத்தநிறுத்தம் அமுலிலுள்ள போது, யாரும் எதிர்பாராத நேரத்திலே புலிகளின் நிலைமீது அரசு தாக்குதல் தொடுத்தபோது புலிகள் திருப்பித் தாக்கியதில் இரு தாக்குதல் தாரிகள் உயிரிழந்துள்ளனர். இது புலிகளின் எச்சரிக்கையுணர்வையும், இனியும் ஒரு போர் வந்தால்,அதனையும் எதிர்கொள்ளப் புலிகள் தயாராக இருப்பதையும் கோடிட்டுக் காட்டியுள்ளது. இது அரசுக்கு விழுந்த அடியாகும். இனியாவது போரை ஆரம்பிக்கத் திட்டமிடுவதை விடுத்து தூய மனதோடு சமாதான முயற்சிகளில் இறங்க அரசு முன்வருமா?

இந்த நிலையில் இலங்கையின் சனத்தொகையில் தற்போது மூன்றாவது இடத்திலுள்ள முஸ்லீம்கள் இன்னொரு புதியதொரு கட்சியையும் ஆரம்பித்துவிட்டனர். அண்மைக் காலமாக முஸ்லீம் அரசியல் வட்டாரங்களிலே அடிபடும் புதிய கட்சி ஆரம்பிக்கும் விடயமானது இன்று 'உம்மா' கட்சியிலே முடிந்துள்ளது. உம்மா கட்சியானது சும்மா அமைக்கப்படவில்லை. பிளவுபட்ட முஸ்லீம்களை ஒன்றிணைப்பதற்காகவே அமைக்கப்பட்டது என கட்சி ஆரம்பிப்பாளர்கள் கருத்துக் கூறியுள்ளனர்.

சனத்தொகையிலே மூன்றாவது இடத்திலுள்ள முஸ்லீம்கள் தமது சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஆரம்பிக்கும் கட்சிகளின் எண்ணிக்கையில் விரைவிலேயே முதலிடத்தைப் பிடித்துவிடுவார்கள் போலுள்ளது. அஷ்ரப்பின் மறைவுக்குப் பின்னர் ஏற்பட்ட தலைமைத்துவப் போட்டியானது பல கட்சிகளின் உதயத்துக்கு வழிசமைத்துள்ளது என்பதே உண்மையாகும்.

ஒன்றுபட்டு நிற்கவேண்டிய வேளையிலே ஆளுக்கொரு திசையிலே திசைமாறி நிற்கிறார்கள் முஸ்லீம்கள். ஒரு பேச்சுக்கு மீண்டும் சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்படுகிறது என வைத்துக் கொணடால், முஸ்லீம் மக்கள் தொடர்பான பிரச்சினைகளைப் பேசும் போது, யாரோடு பேசுவது என்ற சிக்கல் அரசுக்கும் - புலிகளுக்கும் ஏற்படும்.இதனால் பாதிக்கப்படப் போவது எனனவோ முஸ்லீம்கள் தான். இதனை உணர்ந்தாவது முஸ்லீம் தலைவர்கள் ஒரு குடையின் கீழே அணிதிரள்வார்களா? அது அல்லாவால் தானும் முடியுமா? என்பது பொறுத்திருந்தே பார்க்கவேண்டும். எவ்வாறாயினும் முஸ்லீம்களுக்கு இனி ஒன்றுக்கு மேற பட்ட தலைமைகள் இருக்கப்போவது மட்டுமே உண்மை.

இதேவேளை கடந்தவாரம் நடைபெற்ற நாடாளு மன்ற அமர்வுகளின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினதும், வேறு சில கட்சிகளினதும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆற்றிய உரைகள் வரவேற்கக்கூடியதாக இருந்தன. அதிலும் இரா.சம்பந்தனின் உரை தற்போதைய சமாதான நகர்வுகளின் தன்மையைத் துலாம்பரப்படுத்தியதுடன், சிங்களத தலைமைகளின் பச்சோந்தித்தனத்தையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

அத்துடன், என்றுமே சர்ச்சைக்குரியவிதத்திலும், புரட்சிகரமான விதத்திலும் கருத்துக்களை வெளிவிடும் மா.க.ஈழவேந்தனும் நாடாளுமன்றிலே வைத்து ஈ.பி.டி.பியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா மீது சீறிப்பாய்ந்துள்ளார். நிமலராஜன், அற்புதன், சின்னபாலா போன்ற ஊடகவியலாளர்களின் கொலைக்கு அமைச்சர் டக்ளஸே காரணமெனவும் குற்றம் சாட்டியுள்ளதுடன், தமிழின துரோகி எனவும் அவரை வர்ணித்துள்ளார். இது டக்ளஸ் சற்றும் எதிர்பாராத விளைவே. 'பொல்லுக் கொடுத்து அடிவாங்கிய கதையாக முடிந்து விட்டது.'

ஆனாலும், நாட்டின் அதியுயர் பீடமான நாடாளுமன்றிலே வைத்துத் தன்மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்கு அமைச்சர டக்ளஸ் என்ன பதில் சொல்லப்போகிறார். காலம் காலமாக ஹன்சாட்டிலே குற்றவாளியாக நிற்கப்போகிறாரா? அல்லது குற்றச்சாட்டுக்களை ஒப்புக்கொண்டு தவறுக்கு மன்னிப்புக் கோரப் போகிறாரா? அல்லது தவறுகளை நியாயப்படுத்தப் போகிறாரா? அல்லது இனியும் புலிகள் மீதே பழியைப் போடப் போகிறாரா....???

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு - 2004

## சங்கானை உதவி அரச அதிபர் பிரிவு

207. யா/ச/ 6346 திரு. கதிர்காமத்தம்பி பாலச்சந்திரா
208. யா/ச/ 6371 திருமதி. சத்தியம்மா கனகநாயகம்
209. யா/ச/ 6386 திருமதி. தேவி சிவஞானம்
210. யா/ச/ 6425 திரு. தம்பு சுப்பிரமணியம்
211. யா/ச/ 6480 திரு. செல்லப்பா கந்தையா
212. யா/ச/ 6506 திருமதி. செல்வம் முருகன்
213. யா/ச/ 6555 திருமதி. நாகம்மா சிவப்பிரகாசம்
214. யா/ச/ 6569 திருமதி. சௌபாக்கியலட்சுமி ஜெயரத்தினம்
215. யா/ச/ 6666 திரு. சிவசம்பு வரதராசா
216. யா/ச/ 6676 திரு. இளையதம்பி நடராசா
217. யா/ச/ 6697 திருமதி. வள்ளிநாயகி கந்தசாமி
218. யா/ச/ 6728 திரு. வேலுப்பிள்ளை இராசதுரை
219. யா/ச/ 6777 திருமதி. புவனேஸ்வரி புண்ணியமூர்த்தி
220. யா/ச/ 6801 திருமதி. பொன்னம்மா நடராசா
221. யா/ச/ 6856 திரு. தர்மலிங்கம் தவக்குமார்
222. யா/ச/ 6869 திரு. கந்தர் துளசிமாலை
223. யா/ச/ 6875 திரு. நாகேசு கந்தையா
224. யா/ச/ 6891 திரு. சுப்பிரமணியம் வீரசிங்கம்
225. யா/ச/ 6901 திருமதி. இராசம்மா இராசசுந்தரம்
226. யா/ச/ 6936 திரு. கதிரேசர் அப்புத்துரை
227. யா/ச/ 6943 திருமதி. விசாலாட்சி வேலுப்பிள்ளை
228. யா/ச/ 6957 திரு. காசிப்பிள்ளை தங்கராசா
229. யா/ச/ 7028 திருமதி. தங்கம்மா பொன்னையா
230. யா/ச/ 7044 திரு. நாகலிங்கம் குமரகுருநாதன்
231. யா/ச/ 7065 திரு. ஆறுமுகம் சிவலிங்கம்
232. யா/ச/ 7080 திரு. வேலு கதிர்காமு
233. யா/ச/ 7090 திரு. பொன்னர் கந்தசாமி
234. யா/ச/ 7108 திரு. தில்லையம்பலம் தேவராசா
235. யா/ச/ 7112 திருமதி. இலட்சுமி கந்தன்

## காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு

1. யா/கா/ 47 திரு. துரைச்சாமி சுப்பிரமணியம்
2. யா/கா/ 157 திரு. அம்பலவாணர் கணபதிப்பிள்ளை
3. யா/கா/ 160 திருமதி. நாகேஸ்வரி பொன்னம்பலம்
4. யா/கா/ 172 திரு. ஆறுமுகம் கந்தையா
5. யா/கா/ 175 திருமதி. செல்லம்மா திருநாவுக்கரசு
6. யா/கா/ 201 திருமதி. மகேஸ்வரி இராசதுரை
7. யா/கா/ 283 திரு. வேலுப்பிள்ளை மாரிமுத்து
8. யா/கா/ 288 திரு. கனகநாயகம் நல்லதம்பி
9. யா/கா/ 334 திருமதி. சிவக்கொழுந்து முருகேசப்பிள்ளை
10. யா/கா/ 402 திரு. பொன்னம்பலம் நடராசா
11. யா/கா/ 433 திரு. பரமநாதர் சிவராசா
12. யா/கா/ 472 திரு. வேலு நாகமுத்து
13. யா/கா/ 490 திரு. வினாசித்தம்பி வேலுப்பிள்ளை
14. யா/கா/ 502 திரு. கந்தையா ஆறுமுகம்
15. யா/கா/ 539 திரு. கணபதிப்பிள்ளை குமரகுரு
16. யா/கா/ 635 திரு. சோமநாதர் அம்பலவாணர்
17. யா/கா/ 673 திரு. செல்வரத்தினம் செல்வராஜா
18. யா/கா/ 675 திரு. கனகரத்தினம் இராசரத்தினம்
19. யா/கா/ 686 திரு. தம்பர் காசிப்பிள்ளை கந்தசாமி
20. யா/கா/ 735 திருமதி. இராசம்மா வினாசித்தம்பி
21. யா/கா/ 740 திரு. குழந்தைவேலு இராசலிங்கம்
22. யா/கா/ 742 திரு. ஐயம்பிள்ளை தம்பிராசா
23. யா/கா/ 977 திரு. வேலுப்பிள்ளை குமாரசாமி
24. யா/கா/ 1034 திரு. முருகேசு ஐயம்பிள்ளை
25. யா/கா/ 1038 திருமதி. பொன்னம்மா வயித்திலிங்கம்
26. யா/கா/ 1046 திரு. விசுவலிங்கம் வேலாயுதபிள்ளை
27. யா/கா/ 1070 திரு. சின்னப்பு நவரத்தினம்
28. யா/கா/ 1182 திரு. இராமநாதர் ஆறுமுகம்
29. யா/கா/ 1188 திருமதி. சரஸ்வதி கதிரவேலு
30. யா/கா/ 1276 திரு. அம்பலவாணர் கனகசுந்தரம்

## வேலணை உதவி அரச அதிபர் பிரிவு

1. யா/வே/ 156 திரு. அம்பலவாணர் தர்மகுலசிங்கம்
2. யா/வே/ 178 திருமதி. விஜயலட்சுமி பாலச்சந்திரன்
3. யா/வே/ 214 திரு. மடுத்தீன் சிங்கராசா
4. யா/வே/ 253 திரு. மயில்வாகனம் தம்பையா
5. யா/வே/ 305 திருமதி. பத்மலோஜினி தவபாலன்
6. யா/வே/ 424 திரு. வேலாயுதர் ஆறுமுகம்
7. யா/வே/ 470 திரு. நாகலிங்கம் சரவணமுத்து
8. யா/வே/ 505 திரு. சுப்பையா சதாசிவம்
9. யா/வே/ 541 திருமதி. அன்னமுத்து சொர்ணலிங்கம்
10. யா/வே/ 543 திரு. மருதப்பு சின்னத்தம்பி
11. யா/வே/ 607 திருமதி. அருளம்மா இராமலிங்கம்
12. யா/வே/ 629 திரு. அருளம்பலம் கனகரெத்தினம்
13. யா/வே/ 642 திருமதி. தங்கம்மா சின்னத்துரை
14. யா/வே/ 689 திருமதி. சின்னப்பிள்ளை முருகேசு
15. யா/வே/ 703 திருமதி. இராசம்மா தம்பியையா
16. யா/வே/ 707 செல்வி. ஜெகதாம்பாள் பொன்னையா
17. யா/வே/ 773 திருமதி. மங்கையற்கரசி நமசிவாயம்
18. யா/வே/ 851 திரு. நாகரத்தினஐயர் ஸ்ரீநிவாசக்குருக்கள்
19. யா/வே/ 853 திரு. கந்தையா சோமசுந்தரம்
20. யா/வே/ 972 திரு. ஆறுமுகம் யாதவராயர்
21. யா/வே/ 981 திரு. பொன்னுச்சாமி சிவலிங்கம்
22. யா/வே/ 1025 திருமதி. பராசக்தி செல்லத்துரை
23. யா/வே/ 1067 திருமதி. அன்னலட்சுமி நடராசா
24. யா/வே/ 1076 திரு. கனகசபை சோதிலிங்கம்
25. யா/வே/ 1145 திரு. தம்பையா சண்முகம்பிள்ளை
26. யா/வே/ 1149 திருமதி. பூமணி சிவநாதன்
27. யா/வே/ 1215 திருமதி. சின்னத்தங்கம் கந்தையா
28. யா/வே/ 1223 திரு. சங்கரப்பிள்ளை சாந்தலிங்கம்
29. யா/வே/ 1265 திருமதி. செல்லாச்சி துரையப்பா
30. யா/வே/ 1313 செல்வி. சந்திரமதி சிவசம்பு
31. யா/வே/ 1341 திரு. இராமலிங்கம் பொன்னுத்துரை
32. யா/வே/ 1344 செல்வி. ஓங்காரரூபி சண்முகநாதன்
33. யா/வே/ 1365 திருமதி. அருளம்மா சிங்கராஜர்
34. யா/வே/ 1391 திரு. கைலாசபிள்ளை கணேசமூர்த்தி
35. யா/வே/ 1409 திரு. வைத்திலிங்கம் வேலாயுதபிள்ளை
36. யா/வே/ 1423 திரு. குமாரசாமி போசராசா
37. யா/வே/ 1435 திருமதி. வினிவிறீடா அன்ரனிதாசன்
38. யா/வே/ 1477 திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம்
39. யா/வே/ 1498 திரு. கந்தையா மாசிலாமணி
40. யா/வே/ 1505 திரு. ஆறுமுகம் செல்லத்துரை
41. யா/வே/ 1536 திருமதி. அன்னம்மா இராசதுரை அந்தோனிப்பிள்ளை
42. யா/வே/ 1547 செல்வி. விசாலாட்சி தில்லையம்பலம்
43. யா/வே/ 1605 திருமதி. சறோஜினிதேவி விமலானந்தம்
44. யா/வே/ 1612 திருமதி. கனகம்மா காசிப்பிள்ளை
45. யா/வே/ 1633 திருமதி. பத்தினிப்பிள்ளை அருணாசலம்
46. யா/வே/ 1697 திரு. ஆறுமுகம் பரநிருபசிங்கம்
47. யா/வே/ 1744 திரு. கணபதிப்பிள்ளை நாகலிங்கம்
48. யா/வே/ 1769 திரு. அம்பலவாணர் குழந்தைவேலு
49. யா/வே/ 1848 திருமதி. இலட்சுமி இராசையா
50. யா/வே/ 1880 திரு. நாகமுத்து ஜயாத்துரை
51. யா/வே/ 1927 திரு. செல்லத்துரை கணநாதன்
52. யா/வே/ 1948 திரு. பசுபதி நல்லதம்பி
53. யா/வே/ 1973 திரு. சுப்பையா சுந்தரம்
54. யா/வே/ 2037 திரு. சவரிமுத்து அத்தனாஸ்
55. யா/வே/ 2108 திரு. மனுவேற்பிள்ளை கிறிஸ் சோஸ்றறம் பொன்ராசா
56. யா/வே/ 2146 திரு. தியாகராசா விஜயகுமார்
57. யா/வே/ 2181 திரு. வீரகத்தி வேலுப்பிள்ளை
58. யா/வே/ 2214 திரு. தாமோதரம்பிள்ளை தம்பாப்பிள்ளை
59. யா/வே/ 2233 திரு. புத்திரங்கொண்டார் சுப்பிரமணியம்
60. யா/வே/ 2317 திருமதி. மாரிமுத்து பொன்னம்பலம்
61. யா/வே/ 2323 திருமதி. சசிமாலா சிறிக்குமார்
62. யா/வே/ 2324 திரு. நாகமுத்து நமசிவாயம்
63. யா/வே/ 2365 திரு. கார்த்திகேசு முத்துலிங்கம்
64. யா/வே/ 2440 திரு. பொன்னம்பலம் செல்வரட்ணம்
65. யா/வே/ 2492 திரு. நாகராசா கோபாலகிருஷ்ணன்
66. யா/வே/ 2548 திரு. ஆறுமுகம் பசுபதி
67. யா/வே/ 2565 திருமதி. வாமகேசி மனோகரன்
68. யா/வே/ 2566 திருமதி. பெரியநாயகி செல்லத்துரை
69. யா/வே/ 2634 திரு. சரவணமுத்து கார்த்திகேசு
70. யா/வே/ 2646 திரு. வைத்திலிங்கம் கந்தையா
71. யா/வே/ 2709 திரு. திருநாவுக்கரசு மகாலிங்கம்
72. யா/வே/ 2814 திருமதி. சவரி ஞானப்பு
73. யா/வே/ 2830 திருமதி. நல்லம்மா தில்லைநாதன்
74. யா/வே/ 2843 திரு. சரவணமுத்து பரநிருபசிங்கம்
75. யா/வே/ 2852 திரு. தம்பிப்பிள்ளை தர்மலிங்கம்
76. யா/வே/ 2916 திருமதி. சபீனா மரியாம்பிள்ளை
77. யா/வே/ 2924 திரு. சுப்பிரமணியம் நல்லையா
78. யா/வே/ 2927 திருமதி. அமலசிரோன்மணி அருள்நேசன்
79. யா/வே/ 3021 திரு. இளையதம்பி தம்பையா
80. யா/வே/ 3050 திரு. நாகநாதம்பிள்ளை சிவஞானம்
81. யா/வே/ 3084 திரு. கந்தையா ஆறுமுகம்
82. யா/வே/ 3129 திருமதி. நல்லதங்கம் கனகசபை
83. யா/வே/ 3215 திருமதி. அமிர்தகௌரி தெய்வேந்திரன்
84. யா/வே/ 3219 திரு. அப்பாக்குட்டி சொக்கலிங்கம்
85. யா/வே/ 3252 திருமதி. மகேஸ்வரி ஆறுமுகம்
86. யா/வே/ 3257 திருமதி. மேரி மரியாம்பிள்ளை
87. யா/வே/ 3276 திருமதி. அன்னம்மா லாசரஸ்பிள்ளை
88. யா/வே/ 3293 திருமதி. லேனம்மா சந்தியாப்பிள்ளை
89. யா/வே/ 3303 திருமதி. கருணாவதி மாணிக்கம்
90. யா/வே/ 3328 திருமதி. சோதிமலர் கருணலிங்கம்
91. யா/வே/ 3425 திருமதி. எட்வீசம்மா லோறன்ஸ்
92. யா/வே/ 3483 திரு. தம்பிப்பிள்ளை மரியாம்பிள்ளை
93. யா/வே/ 3509 திருமதி. இராசம்மா சோமசுந்தரம்
94. யா/வே/ 3511 திருமதி. தெய்வானைப்பிள்ளை நாகலிங்கம்
95. யா/வே/ 3583 திரு. நாகரத்தினம் புண்ணியமூர்த்தி
96. யா/வே/ 3607 திரு. பிலிப்இம்மானுவேல் குணநாயகம்
97. யா/வே/ 3643 திருமதி. அன்னப்பிள்ளை பசுபதிப்பிள்ளை
98. யா/வே/ 3648 செல்வி. அருட்செல்வி சிவகடாச்சம்பிள்ளை
99. யா/வே/ 3659 திரு. சுப்பையா துரைச்சாமி
100 . யா/வே/ 3668 திருமதி. அமராவதி ஆறுமுகம்
101 . யா/வே/ 3703 திரு. மருசலீன் ஞானப்பிரகாசம்
102 . யா/வே/ 3723 திருமதி. இராசம்மா கனகரத்தினம்
103 . யா/வே/ 3738 திரு. அம்பலவாணர் பொன்னுத்துரை
104 . யா/வே/ 3760 திருமதி. ஞானசக்தி பாலசுப்பிரமணியம்

## கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவு

1. யா/க/ 8 திரு. சின்னையா வைத்திலிங்கம்
2. யா/க/ 51 திரு. கந்தர் தாமோரம்பிள்ளை
3. யா/க/ 68 திரு. வல்லிபுரம் சின்னையா
4. யா/க/ 84 திரு. வீரகத்தி கதிரித்தம்பி
5. யா/க/ 102 திரு. சிற்றம்பலம் பொன்னையா
6. யா/க/ 330 திரு. சிதம்பரம் சின்னத்துரை (வேலாயுதம்)
7. யா/க/ 338 திருமதி. லீலாவதி தர்மலிங்கம்
8. யா/க/ 424 திருமதி. பொன்னம்மா கந்தப்பு
9. யா/க/ 634 திரு. முருகேசு கந்தையா
10. யா/க/ 646 திரு. சபாபதிப்பிள்ளை இராசசிங்கம்
11. யா/க/ 669 திரு. விசுவர் பொன்னையா
12. யா/க/ 686 திரு. வல்லிபுரம் தம்பையா
13. யா/க/ 689 திரு. முருகேசு தம்பிஐயா
14. யா/க/ 717 திரு. வயிரமுத்து வடிவேலு
15. யா/க/ 731 திருமதி. கனகம்மா நாகரத்தினம்
16. யா/க/ 744 திரு. வேலுப்பிள்ளை இராமலிங்கம்
17. யா/க/ 861 திரு. சின்னத்தம்பி சிற்றம்பலம் செல்லையா
18. யா/க/ 868 திருமதி. பத்தினிப்பிள்ளை சிவகுரு
19. யா/க/ 869 திரு. நாகலிங்கம் செல்லையா
20. யா/க/ 870 திரு. நாகலிங்கம் செல்லையா
21. யா/க/ 871 திரு. சிதம்பரப்பிள்ளை கனகசபை
22. யா/க/ 941 செல்வி. சரோஜினிதேவி சோமசுந்தரமூர்த்தி
23. யா/க/ 966 திரு. கணபதிப்பிள்ளை தில்லையம்பலம்
24. யா/க/ 1025 திரு. பொன்னுத்துரைஐயர் சிறீதரக்குருக்கள்
25. யா/க/ 1029 திருமதி. இரத்தினம் தங்கவேலு
26. யா/க/ 1066 திரு. தியாகராசா பாலசுப்பிரமணியம்
27. யா/க/ 1069 திருமதி. செல்வமணி சின்னத்துரை
28. யா/க/ 1073 திருமதி. கமலாதேவி இராசதுரை
29. யா/க/ 1094 திருமதி. கமலாதேவி கந்தசாமி
30. யா/க/ 1104 திருமதி. கமலாதேவி இராமலிங்கம்
31. யா/க/ 1140 திருமதி. சிவதேவரத்தினம் தவபாலசிங்கம்
32. யா/க/ 1154 திரு. வேலுப்பிள்ளை வடிவேலு இரத்தினம்
33. யா/க/ 1228 திருமதி. மீனாட்சியம்மா தங்கவடிவேல்
34. யா/க/ 1259 திரு. சிதம்பரப்பிள்ளை கனகசபை
35. யா/க/ 1269 திரு. ஆறுமுகம் வேலுப்பிள்ளை
36. யா/க/ 1308 திரு. மாணிக்கம் ஸ்ரீஸ்கந்தராசா
37. யா/க/ 1326 திரு. அம்பலவாணர் கதிரிப்பிள்ளை
38. யா/க/ 1357 திருமதி. சாந்தி புலேந்திரன்
39. யா/க/ 1471 திரு. முருகர் செல்லையா
40. யா/க/ 1472 திரு. வயிரமுத்து மயில்வாகனம்
41. யா/க/ 1483 திரு. கதிரிப்பிள்ளை வல்லிபுரம்
42. யா/க/ 1494 திரு. இராமலிங்கம் சிவானந்தசுந்தரம்
43. யா/க/ 1499 திரு. மயிலு சங்க்ரப்பிள்ளை
44. யா/க/ 1532 திரு. தம்பர் சின்னத்தம்பி
45. யா/க/ 1562 திருமதி. சின்னத்தங்கம் சிதம்பரப்பிள்ளை
46. யா/க/ 1582 திரு. தம்பு தங்கராசா
47. யா/க/ 1584 திரு. இராமலிங்கம் பொன்னுத்துரை
48. யா/க/ 1594 திரு. கணபதிப்பிள்ளை தியாகராஜா
49. யா/க/ 1605 திருமதி. கருணாதேவி தெய்வேந்திரநாதன்
50. யா/க/ 1618 திரு. கதிரிப்பிள்ளை சுப்பிரமணியம்
51. யா/க/ 1638 திரு. சுப்பர் செல்லையா
52. யா/க/ 1646 திரு. வேலுப்பிள்ளை தங்கராசா
53. யா/க/ 1690 திரு. கந்தவனம் இராசதுரை
54. யா/க/ 1736 திரு. சீனிவாசன் குமாரரத்தினம்
55. யா/க/ 1774 திருமதி. பாக்கியலட்சுமி சுப்பிரமணியம்
56. யா/க/ 1798 திருமதி. நாமகள் பொன்னையா
57. யா/க/ 1883 திரு. சிதம்பரப்பிள்ளை முருகேசு
58. யா/க/ 2119 திருமதி. தேவராணி இராஜேஸ்வரன்
59. யா/க/ 2120 திரு. சிவக்கொழுந்து இரத்தினராசா
60. யா/க/ 2142 திருமதி. கமலமுத்து பசுபதி
61. யா/க/ 2209 திரு. வல்லிபுரம் சின்னத்தம்பி
62. யா/க/ 2256 திருமதி. தங்கம்மா உருத்திரபாக்கியம்
63. யா/க/ 2273 திரு. சின்னத்துரை ரகுநாதன்
64. யா/க/ 2294 திரு. தங்கராசா அருணகிரிராசா
65. யா/க/ 2377 திருமதி. விஜயராணி நாகராஜா
66. யா/க/ 2387 திரு. கந்தையா துரைசிங்கம்
67. யா/க/ 2433 திரு. கந்தையா நவரட்ணம்
68. யா/க/ 2482 திருமதி. சின்னக்கண்டு அருணாசலம்
69. யா/க/ 2483 திரு. சின்னையா மயில்வாகனம்
70. யா/க/ 2528 திருமதி. சறோஜினிதேவி பொன்னுத்துரை
71. யா/க/ 2662 திருமதி. அம்மிணி சின்னப்பு
72. யா/க/ 2675 திரு. சங்கரன் கிட்டிணன்
73. யா/க/ 2702 திரு. இராசகுலஅரியரத்தினம் மகேந்திரா
74. யா/க/ 2739 திரு. முத்து அருளானந்தம்
75. யா/க/ 2749 திரு. கனகரத்தினம் லோகநாதன்
76. யா/க/ 2757 திரு. தம்பு இராஜா
77. யா/க/ 2813 திரு. கந்தசாமி தம்பிப்பிள்ளை
78. யா/க/ 2819 திரு. கந்தையா இளையதம்பி
79. யா/க/ 2832 திரு. முத்து வேலுப்பிள்ளை
80. யா/க/ 2838 திரு. பொன்னையா வேலாயுதம்
81. யா/க/ 2881 திரு. கார்த்திகேசு சின்னத்துரை
82. யா/க/ 2956 திரு. கார்த்திகேசு தனபாலசிங்கம்
83. யா/க/ 2980 திரு. நீக்கிலாம்பிள்ளை அந்தோனிமுத்து
84. யா/க/ 2988 திரு. கந்தசாமி பாலேந்திரம்
85. யா/க/ 2991 திரு. முத்து ஆறுமுகம்
86. யா/க/ 3026 திரு. மயில்வாகனம் ஜெயவரதராஜா
87. யா/க/ 3091 திரு. அம்பலவி சண்முகம்

(மிகுதி நாளை)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மினிபஸ் கட்டண அதிகரிப்பு வெள்ளியன்று இறுதி முடிவு!

(வடமராட்சி)

யாழ்.குடாநாட்டில் சேவையில் ஈடுபடும் தனியார் மினிபஸ் கட்டணங்களை உயர்த்துவது தொடர்பாக, எதிர்வரும் வெள்ளிக்கிழமை இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளதாக மினிபஸ் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

தனியார் மினிபஸ் கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பாக, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு யாழ்.மாவட்ட தனியார் மினிபஸ் சங்கங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அதிகரித்த கட்டணப்பட்டியலுக்கும், வட.பிராந்திய போக்குவரத்துச்சபையின் அதிகரித்த கட்டணத்துக்குமிடையே முரண்பாடுகள் இருப்பதாக தனியார் மினிபஸ் சங்கம் சுட்டிக்காட்டி அது குறித்து விளக்கமளிக்கச் சந்தர்ப்பம் தருமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் யாழப்பாணப் பிரதிநிதிகள் யாழ்.அரச அதிபரைக் கேட்டுள்ளனர்.

இதனையடுத்து, எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். அரசாங்க அதிபருக்கும், யாழ்.மாவட்ட தனியார் மினிபஸ் சங்கங்களின் சங்க உறுப்பினர்களுக்குமிடையே பேச்சுக்கள் இடம்பெற்று, அந்தப் பேச்சுவார்த்தையின்போதே இறுதி முடிவு எடுக்கப்படும். அதன்பின்னரே ஒவ்வொருபாதையிலும் சேவையில் ஈடுபடுத்தப்படும் தனியார் பஸ் வண்டிக்கான அறவிடப்படும் கட்டணம் குறித்து அறிவிக்கப்படும்.

அதேவேளை - அதிகரித்த கட்டணம் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படுவதற்கு முன்னதாக, குடாநாட்டில் சேவையில் ஈடுபடும் தனியார் மினிபஸ் வண்டிகள் இ.போ.சபை அறவிடும் பணத்துக்குச் சற்றுக் குறைவாகவே பயணிகளிடம் கட்டணங்களை அறவிட்டு வருகிறது. (17)



நல்லைக் கந்தன் 22 ஆம் நாள் திருவீதியுலாக் காட்சி

## வவுனியா காவலரணில் இருந்த இராணுவச் சிப்பாய் தற்கொலை!

வவுனியா - மன்னார் வீதியில் அமைந்திருக்கும் பம்பைமடுவில் உள்ள இராணுவ முகாமில் பணியாற்றும் இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்று அதிகாலை தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

இந்தச் சம்பவத்தில் இறந்த சிப்பாய் 27 வயதுடைய விஜயக்கோன் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியா மாவட்ட நீதிவான் விசாரணைகளை மேற்கொள்ளுமாறும், பிரேதபரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் சடலத்தை ஒப்படைககு மாறும் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நேற்றுக்காலை 5.30 மணிக்கு இரண்டாவது முன்னரங்க காவல் நிலையப் பகுதியில் மூன்று படையினர் காவலில் இருந்தனர். இருவர் ஓய்வெடுத்த சமயம் மேற்குறிப்பிட்ட அந்த இராணுவச் சிப்பாய் தனக்குத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இறந்த இராணுவச் சிப்பாயின் பேர்சிலிருந்து காதல் கடிதம் ஒன்று மீட்கப்பட்டதாக தெரியவருகின்றது. அத்துடன், இறந்த இராணுவச் சிப்பாய் கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன்பாகவே தனது எட்டு மாதகால பயிற்சியை முடித்துவிட்டு பணியினை ஆரம்பித்தார் என்று தெரியவருகிறது.

## அரியாலையில் கொல்லப்பட்டவர் இராணுவ உளவாளியாம்

### கேணல் சுமேத பெரேரா தெரிவிப்பு

அரியாலைப் பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் கழுத்து வெட்டப்பட்ட இளைஞர் இராணுவத்துக்குத் தகவல் வழங்குபவர் என இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரியாலையில் வெட்டிக் கொல்லப்பட்ட இளைஞர் இராணுவத்திற்கு தகவல் வழங்கி வந்தார் இவரைப் புலிகளே கொன்றுள்ளனர். இத்தகைய சம்பவங்கள் தொடராமல் தடுப்பதற்குரிய அழுத்தங்களை சர்வதேச சமூகம் புலிகளுக்கு கொடுக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### இடைக்கால...

ஒன்று உருவாகவில்லை?

இதனடிப்படையில் பார்க்கும் போது தமிழ் மக்களின் போராட்ட உணர்வுகளை சிங்கள மக்கள் புரிந்துகொண்டுள்ளனர் என உணர முடிகிறது.

தென்பகுதியில் காணாமற்போனோர் தொடர்பாக 307 இராணுவத்தினர் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டபோதும், அவர்கள் பிற்காலத்தில் வடபகுதிக்கு அனுப்பப்பட்டு பதவியுயர்வு வழங்கப்பட்டு, தேசிய வீரர்களாகத் திகழ்கின்றனர்.

காணாமற்போனோர் தொடர்பான வழக்கு விசாரணைகளில் யாழ்.குடாநாட்டு மக்கள் நம்பிக்கையிழந்த நிலையில் காணப்படுகின்றனர். அவர்கள் தொடர்பாக சட்டமா அதிபரிடம் நாம் மனுவொன்றைச் சமர்ப்பிக்கவுள்ளோம்.

காணாமற்போன சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்குத் தகுந்த தண்டனை கிடைக்க வேண்டும் அதற்கான செயற்பாடுகளை நாம் மேற்கொண்டுவருகின்றோம். எதிர்காலத்தில் எமது நாட்டில் சமாதானம் ஒன்று நிலவவேண்டும்.

நாம் தற்போது யாழ்.குடாநாட்டு மக்களுக்காக சுயாதீன மனித உரிமை குழு ஒன்றினை அமைக்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

### போராளி விரச்சாவு

(கிளிநொச்சி)

5.3.1991 அன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினருடனான நேரடி மோதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்தள்ளனர்.

லெப்டினன்ட் அனு என்று அழைக்கப்படும் பெரியபுல்லுமலை, கேப்பாய்வெளி மட்டக்களப்பு என்ற முகவரியைச்சேர்ந்த கணபதிப்பிள்ளை இராசலட்சுமி என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார்.

### ஜப்பானிய...

கள் குறித்து கலந்துரையாடல் நடத்துவதற்கும் நிதியுதவிகள் குறித்த இறுதி முடிவு எடுப்பதற்கும் யசுஷி அகாஷி அடுத்த வாரம் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது அரசாங்கத்தரப்பில் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பலரையும் சந்தித்துப் பேசுவதுடன் கிளிநொச்சிக்கும் விஜயம்செய்து அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் சந்தித்துப் பேசுவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (01)

### இந்திய கடற்படை..

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் முப்படைத்தளபதிகளையும், பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவிருக்கிறார்.

இவர் தனது நான்கு நாள் விஜயத்தில் - ஒரு நாளை திருகோணமலையில் கழிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது திருகோணமலை துறைமுகப் பாதுகாப்பு குறித்து இவர் விரிவான ஆய்வுகளை மேற்கொள்வார் என படைவட்டாரங்கள் தெரிவித்தன.

## அமெரிக்கத் தூதரகம் முன்பாக சிங்கள அமைப்பு ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு முன்பாக நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தை ஜாதிக பொது உறுமய என்ற அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட திரைப்படம் ஒன்றின் மூலமாக பௌத்த மதத்திற்கு அவதூறு ஏற்பட்டிருப்பதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் கோஷம் எழுப்பினர்.

'ஹொலிவூட் புத்தா' எனும் இந்தத் திரைப்படம் எதிர்வரும் 23 ஆம் திகதி திரையிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திரைப்படத்தைத் தடை செய்யுமாறு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் கோரிக்கைவிடுத்தனர்.

## கொழும்பு துறைமுகத்தினுள் நுழைய முயன்றவர் கைது!

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்துக்குள் அனுமதியின்றிப் பிரவேசிக்க முயன்றதாக மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவரைக் கடற்படையினர் கைதுசெய்தனர்.

கொழும்புத்துறைமுகத்தின் லேடன் பஸ்ரியன் வாயில் வழியாக கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 1.20 மணியளவில் நுழைய முயன்ற போது மட்டக்களப்பு, பெரிய போரதீவு - முனைத்தீவைச் சேர்ந்த தர்மலிங்கம் பேரின்பம் என்ற 41 வயதான தமிழர் ஒருவரே கைதுசெய்யப்பட்டார்.

கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட இவர், கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு, நீதிமன்றில நிறுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

### லண்டன்...

மற்றையவர்களையும் நாம் தேடி வருகின்றோம். இந்தச் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் பலர் வெளியில் உள்ளனர்.

அத்துடன் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் ஆண்கள் என்பது தெளிவாகத் தெரிகின்றது. இந்தச் சம்பவத்திற்குப் பொறுப்பானவர்கள் அனைவரையும் நாம் நீதியின் முன் நிலைநிறுத்துவோம்.

இரட்ணசேகரம் அசன் கொல்லப்பட்டதற்கும், வடக்கு மற்றும் மேற்கு லண்டன் பகுதியில் அதிகரித்துள்ள இலங்கையர்களின் படுகொலைகளை விசாரிப்பதற்கும் விசேட விசாரணைப் பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளதெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

### ஈ.பி.டி.பி...

இதேவேளை - இந்தச் சம்பவத்தில் மேலும் இருவர் காயமுற்றுள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்த போதும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

இது தொடர்பாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு செய்தி திரட்டச் சென்ற செய்தியாளர்கள் சிலர் அங்கு கடமையில் இருந்த பெண் வைத்தியர் ஒருவரால் அவமதிக்கப்பட்டதுடன் -

பொலிஸாரிடம் பிடித்துக் கொடுக்கப்போவதாகவும் மிரட்டினார். இதனால், இந்தத் தகவலை உறுதிப்படுத்த முடியவில்லை.

## கச்சதீவில் மீட்கப்பட்ட அகதிகள் சொந்த இடங்களுக்கு திரும்பினர்



இந்திய அகதிமுகாமிலிருந்து மீளக்குடியமரும் நோக்கில் திரும்பியவேளை கச்சதீவில் இறக்கிவிடப்பட்ட 28 பேரும் நேற்று காலை நெடுந்தீவில் இருந்து அழைத்துவரப்பட்டு யாழ் - செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டு, அங்கு அவர்களுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு, சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை அழைத்துவரப்பட்ட அனைவரும் குறிகட்டுவான் துறைமுகத்தில் இருந்து யாழ் - செயலக லொறி மூலம் செயலகத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

யாழ்.செயலகத்தினால் ஒரு குடும்பத்திற்கு தலா 1000 ரூபாவும், குடும்பத்தில் யாரும் தனியாக ஒருவர் வந்திருந்தால் அவருக்கு [illegible] ரூபாவும் உதவித் தொகையாக வழங்கப்பட்டு அவர்களுக்கான வழி அனுமதிக் கடிதங்களும் வழங்கப்பட்டதுடன் மதிய உணவும் வழங்கப்பட்டு மதியம் 2 மணியளவில் செயலக லொறிமூலம் முகமாலைப் பகுதிவரை கொண்டுசென்று விடப்பட்டனர்.

இதேவேளை இவர்களை யாழ். செயலகத்தில் வைத்து ஐ.ஒ.எம், யு.என்.எச்.சி.ஆர் அதிகாரிகளும் சந்தித்து அவர்கள் தொடர்பான விபரங்களைத் திரட்டியதுடன் அவர்கள் சொந்தஇடங்களுக்குச் சென்றதும் அங்குள்ள இந்த நிறுவனங்களின் பிரிவுகளூடாக உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டு பதிவு அட்டைகளும் வழங்கப்பட்டன.(113)

## வரதர் அணி முக்கியஸ்தர் இந்திய உதவி கோரினார்!

(கொழும்பு)

தமது அமைப்புக்கு இந்திய அரசாங்கம் நேரடியாக உதவிகளை வழங்க வேண்டும் என்று ஈ.பி.ஆர்.எல்.எவ்.வரதர் அணியின் முக்கியஸ்தர் ஒருவர் கோரிக்கை விடுத்துள்ளார். கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் மற்றும் பிரதித்தூதுவர் மோகன்குமார் ஆகியோரைச் சந்தித்தே வரதர் அணி முக்கியஸ்தர் ஒருவர் இந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார்.

இதுவரை காலமும் தமது அமைப்புக்கு வழங்கப்பட்டுவரும் நிதி, இந்தியாவில் வரதராஜப்பெருமாளின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டது. இவ்வாறு வழங்கப்படும் பணம் தம்மை வந்தடைவதில்லை என இவர் இந்தியத்தூதுவரிடம் எடுத்துக்கூறியுள்ளார்.

மாற்றுக்கருத்துள்ளவர்கள் கொலைசெய்யப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அதற்கு இந்தியா ஆயுத பங்களிப்புச் செய்யவேண்டும் என்பதையும் இவர் வலியுறுத்தி இருப்பதாகத் தெரியவருகிறது.

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி புனிதவதி



மீசாலை மேற்கு பங்களா வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி புனிதவதி அவர்கள் 11.09.2004 சனிக்கிழமை அகால மரணமானார்.

இவர் கந்தையா அன்னம்மாவின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசபூபதி, கமலாதேவி, காலஞ்சென்ற திலகவதி, புஸ்பவதி, காலஞ்சென்ற கைலாசபதி, ஸ்ரீபதி, கருணாபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சிவசம்பு, கந்தையா, காலஞ்சென்ற ஆனந்தி, ஜெயந்தி, இந்துமதி ஆகியோரின் அன்பு மைத்துனியும்,

ஆனந்தி, தமயந்தி, தயா, துரை, லவக்குமார், குமாரி, விஜயா, சதிஷ், பிரியா, சுகந்தி (அமெரிக்கா), சாந்தி (டென்மார்க்), சூட்டி, வவி (நிறோஜினி)ஆகியோரின் பெரிய தாயாரும், ரேகா, நிசாத், கிரி, விது, சினேகா, அபி, ராகவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பங்களா வீதி,*
*மீசாலை மேற்கு,*
*மீசாலை.*

(3087)

தகவல் :
மம்மி-டடி குடும்பத்தினர்

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.